www.tamilarangam.net


# தாக்கம் 19

ஶ்ரீலங்கா தலைமை அஞ்சலகத்தில் பதிவு பற்றது

பங்குனி 1983 * மலர் 3 * இதழ் 1 * விலை: 2/-


மக்களைச் செயலுக்கு அறைகூவுவதைப் பொறுத்தவரை, சக்தி வாய்ந்த அரசியல் கிளர்ச்சியும் உயிர்ப்புள்ள எடுப்பான அம்பலப் படுத்தல்களும் செய்கிறபோது அது தானாகவே வரும்.

— லெனின்

## மலையக மக்கள் மீது தொடரும்

# இனக்கொலைகள்!

- ராஜா ஜெபமணியை தோட்டத்துரை, காரால் மோதிக் கொன்றார்!
- துரைமாருக்குப் பொலிஸ் பாதுகாப்பு!
- குணசீலன் என்ற இளைஞர் அடித்துக் கொலை!
- இலட்சுமி என்ற பெண் தாக்கப்பட்டு கால் பிடுங்கப் பட்டது!
- பன்குளத்தில் 16 குடிசைகளுக்கு கிராம சேவகர் தீ வைத்தார்!
- இதுவரையில் 79 பேர் உயிரிழந்தனர்!

அவலம் நிறைந்த மலையக மக்களின் வாழ்வு படிப்படியாக விளிம்புக்குத் தள்ளப் பட்டு வருகிறது. தொண்டமானைக் கட்டிவைத்து விட்டு மறுமலர்ச்சி, சமத்துவம், சம வாய்ப்பு, சமஉரிமை என்றெல்லாம் அரசு நாளுக்கு நாள் உச்சரித்துக் கொள்கிறது. ஆயினும் உண்மையை, உட்புகைச்சலை எத்தனை காலத்துக்கு மூடி மறைக்க முடியும்? அல்டோர், விடஸ்டேல் தோட்டங்களிலும் பன்குளத்திலும் அண்மையில் நடாத்தப் பட்ட அடாவடித்தனங்களும், காடைத் தனங்களும் இந்த உண்மைக்கு உரைகல்லாகின்றன.

### அல்டோர் படுகொலை'

அக்கரைப்பத்தனை மாவட்டத்திலுள்ள ஒரு தேயிலைத் தோட்டமே அல்டோர். இங்கு தொழிலாளர்கள் ஜனவரி 5ம் திகதி முதல், புல்வெட்டுதல், தேயிலை பிடுங்குதல், கவ்வாத்துப்பண்ணல் சம்பந்தமான சிலகோரிக்கைகளை முன் வைத்து வேலை நிறுத்தத்தில் குதித்திருந்தனர். இந்நேரத்தில், இப் பிரச்சனையை தீர்க்க வருவதாகக் கூறிக்கொண்டு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலையிட்டது. தீர்விற்காக வந்த இ. தொ. கா, தோட்ட நிர்வாக அதிகாரிகளுக்கும், தொழிலாளருக்கும் இடையில் நின்று சமரசப் பேச்சுகளில் இறங்கியிருந்தது. பேச்சுவார்த்தைகள் முற்றுப் பெற்றதும், தொழிலாளர்களை வேலைக்குத் திரும்புமாறு கூறியிருந்தது. இவ் வேண்டுகோளுக்கிணங்க தொழிலாளர் ஜனவரி 25இல் வேலைக்குத் திரும்பி இருந்தனர். ஆனால் அன்று பெரிய கணக்குப்பிள்ளை வழமைக்கு முரணான முறையில் முதியோரையும், சிறுவரையும் தேயிலை பிடுங்கச் செல்லுமாறும், இளைஞரை புல் வெட்டச்செல்லுமாறும் கட்டளையிட்டிருக்கிறார். இதனை ஆட்சேபித்து தொழிலாளர் தோட்டத் துரையைச் சந்திக்கச் சென்றிருந்தனர். தொழிலாளரின் ஆட்சேபனையை சட்டை செய்யாமல் தோட்டத்துரை டயகம என்ற இடத்திலுள்ள வேறொரு

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

## அரசின் பொருளாதாரக் கொள்கைகள்

# எதிர்காலத்தை எச்சரிக்கின்றன!

8-3-83ல் பாராளுமன்றத்தில் வரவு செலவுத்திட்டம் சம்பந்தமாக பேசிய நிதி மந்திரியின் பிரதான கூற்றுக்கள்.

1. இந்த அரசாங்கத்தின் பொருளாதாரச் சாதனைகள் குறிப்பிடத் தக்கவைகளாக இருக்கின்றன.
2. எமக்கு முன்பாக உள்ள காலப்பகுதி சுகமாக இருக்கமாட்டாது.
3. உலகப் பணவீக்கம், பின்னடைவு, எமது வர்த்தக மாற்றுவிகிதங்களின் சீர்கேடுகள் எளிதில் மாறத்தக்க செலாவணி விகிதங்கள், உயர்ந்த வட்டி விகிதங்கள் போன்ற எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணிகளின் நிமித்தம் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது.
4. நாட்டின் மோசமடைந்த பொருளாதார நிலை பற்றி நான் மிகவும் வெளிப்படையாகவே கூறியுள்ளேன்.
5. எமதுஅரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட புரட்சிகரமான பொருளாதாரக் கொள்கைகளை அவை ஏற்படுத்தியுள்ள பெறுபேறுகளினாலேயே கணிக்கப்படல் வேண்டும்.

நிதி அமைச்சரின் பேச்சுக்களைத் தொகுக்கும்போது, இந்த அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையும் அதனால் ஏற்பட்ட பாதிப்பும் நிதி அமைச்சர் என்ற ரீதியில் ரொனிடீ மெல்லின் வாயிலிருந்து மேற்கண்டவாறு முன்னுக்குப்பின் முரண்படும் கருத்துக்களாக வெளிக்கிளம்பி கீழ்க்காணும் உருவங்களில் நாற்றமெடுத்து மூலை முடுக்குகளெல்லாம் நாற்றம் பரவியுள்ளதை இன்று நாடறியும்.

ஐ. தே. க. புரட்சிகரமான பொருளாதாரக் கொள்கைகள் என்று இரண்டு பிரதானமான அம்சங்களைக் கொண்டுவந்தது. ஒன்று திறந்த பொருளாதாரக் கொள்ளை (கொள்கை) இது வெளிநாட்டுக் கம்பனிகளையும், நிறுவனங்களையும் சுதந்திரமாக நாட்டுக்குள் புகுந்து மூலதனமிட்டும், சந்தைப்படுத்தியும் சுரண்டிச்செல்ல வழி வகுத்தது. மற்றது தனியார் துறையை ஊக்குவித்தது. இது தனிநபரோ அல்லது தனிநபர் கொண்ட சிறு குழுக்களோ தன்னிச்சைப்படி பொருளாதாரத் துறையில் ஆதிக்கம் செலுத்த வழிவகுத்தது.


இந்த இரு பகுதியினரதும் தொழில்நடவடிக்கைகள் நாட்டில் ஏற்படுத்தியுள்ள தாக்கமே, இன்றைய பொருளாதார நெருக்கடிகளுக்கான பிரதான காரணங்களாகின்றன.

### வெளிநாட்டு நிறுவனங்கள் பெறும் கொள்ளை லாபம்.

இன்று இந்நாட்டில் குறிப்பாக சோடா, சிகரட், மருந்து உணவு, மது, பற்பசை, இனிப்பு உரம், சப்பாத்து, சவர்க்காரம் நீலம், தையல் இயந்திரம், பல வகைஉபகரணங்கள், தொலைக் காட்சிப்பெட்டி, வானொலிப் பெட்டி, வாகனங்கள்...... இவ்வாறு சகலமும் வெளிநாட்டு நிறுவனங்களின், கம்பனிகளின் பொருட்களாக காட்சிதருகின்றன. இந் நிறுவனங்களின் உரிமையாளர்கள் முக்கியமாக அமெரிக்கா, மேற்குஐரோப்பா ஜப்பான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களாவர்.

உள்நாட்டில் இவற்றின் கொள்ளையடிப்பை ''ரெக்கிற் அன் கொல்மன்'' என்ற கம்பனி பற்றி ஆய்வாளர்கள் வெளியிட்டுள்ள தகவல்களைக் கொண்டு வெளிச்சமிட்டுக் காட்டலாம். இதன் தாய் நிறுவனம் பிரித்தானியாவில் உள்ளது. இது டிஸ்பிறின், கார்டினல், பென்சன்சப்பாத்துப் பூச்சு, ரொபின் நீலம், டெற்ரோல், கோயா வாசனைத் திரவியங்கள், கோபரா பூச்சு, ரொபின் சுத்திகரிப்பு தூள்,

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செய்திகள்

## தீவிரவாத இளைஞர்களுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை...

— வி. என். வேண்டுகோள் —

வன்முறையை நாம் ஆதரிக்கவில்லை; ஆனால் எமது இளைஞர்களின் நெருக்கடிக்கு ஆளாகியுள்ளோம். வாழ்வா சாவா என்னும் நிலையில் நாம் இருக்கிறோம். இவ்வாறு திரு. அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் பேசியிருந்தார்.

தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கும் வன் செயல்களுக்கும் அரசியல் தீர்வு காணவேண்டியதேவை ஏற்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தன இந்தப் பிரச்சனைக்குத் தீர்வுகாண விரும்புகிறார். தெற்கில் இதைச் சாதிக்கக் கூடிய ஒரேயொரு நபரும் இவரேதான்.

வடபகுதி தீவிரவாத இளைஞர்களை சந்திக்க விரும்புவதாக ஜனாதிபதி என்னிடம் கூறியிருக்கிறார். தனிப்பட்ட முறையில் நான் இதை வரவேற்கிறேன், கட்சி சார்பில் இதை நான் சொல்லவில்லை.

ஆனைக்கோட்டை, சாவகச்சேரி பொலிஸ் நிலையங்களைத் தாக்கிய இளைஞர்கள் தங்கள் உயிர்களைத் துச்சமாக மதித்து அந்தச் செயல்களில் ஈடுபட்டிருந்தனர்.

அவர்களின் நடைமுறையை நாம் ஏற்றுக்கொள்ளாத போதிலும் அவர்களின் நோக்கத்தை நாம் மதிக்கிறோம். அந்த இளைஞர்களுடன் ஜனாதிபதி பேச்சு நடத்த வேண்டும்.''

## தொழிலாளர் பட்டினிச் சாவு!

தேயிலை தோட்டங்களை அரசாங்கம் பொறுப்பேற்றபோது, மாத்தளை வேவல்மட தோட்டத்தில் முதலாளிக்காகப் பிரித்துக் கொடுக்கப்பட்ட 140 ஏக்கர் தோட்டம் யாரும் கேட்பாரற்ற நிலையில் காட்சியளிக்கிறது. இங்கு 1974 ஆம் ஆண்டுமுதல் வேலைகள் நடைபெறுவதில்லை.

தொழிலாளர்கள், தமக்கு கிடைக்கவேண்டிய பாக்கிப் பணம், சகாயநிதி கிடைக்கும் வரை இத்தோட்ட வயன்களில் தங்கியிருக்கிறார்கள். இத்தோட்டத்தில் எதுவித பயிர்ச்செய்கையையும் மேற்கொள்ளக் கூடாதென்று முதலாளி உத்தரவிட்டிருக்கிறார்.

இதனால் இத்தோட்டத்தில் வசிக்கும் தொழிலாளர்கள் பட்டினி கிடந்து சாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

திரு. அமிர்தலிங்கத்தின் பேச்சுக்குப் பின், திரு. வி. என் நவரத்தினம் பாராளுமன்றத்தில் பேசிய பேச்சிலேயே மேற்படி வேண்டுகோளை விடுத்திருந்தார்.

## இந்துக்கோயில் நாசம்

திருகோணமலை பிரெட்றிக் கோட்டை வாயிலுக்கு வெளியே கடலை நோக்கி இருக்கும் பிள்ளையார் கோயிலின் கதவு உடைக்கப்பட்டு, உள்ளிருந்த விநாயகர் விக்கிரமும், வேலும் சிதைக்கப்பட்டு அருகிலுள்ள கிணற்றினுள் வீசப்பட்டிருந்தன.

மகா சிவராத்திரியை அடுத்து 13ந் திகதி பிற்பகல் 3.00 மணியளவில் உற்சவமூர்த்தி மூன்று நாள் நகர் வலத்தை ஆரம்பித்தார். அன்றைய இரவுதான் இச்சம்பவம் நடந்தது.

77ம் ஆண்டு இனக்கலவரத்தின் போதும் இக்கோயிலின் விக்கிரம் உடைக்கப்பட்டு கடலில் வீசப்பட்டது இக்கோயிலிற்கருகில் இராணுவ முகாம் ஒன்று இருப்பது குறிப்பிடத்தக்கது.

# கருத்துச் சித்திரச் செய்தி

## வெளியாரின் புத்திமதி

உலகவங்கி, சர்வதேச நாணய சபை ஆகியவற்றிடமிருந்து உதவியை பெறவே அத்தியாவசியப் பொருட்களான அரிசி, பாண் ஆகியவற்றின் விலைகளிலும் போக்குவரத்து கட்டணத்திலும் அதிகரிப்பு செய்யவேண்டி இருந்தது.''

இவ்வாறு ஜனாதிபதி ஜே. ஆர் இந்தியாவில் வைத்துக் கூறியிருந்தார். தாஜ்மஹால் ஹோட்டலில்வைத்து சந்தித்தபத்திரிகையாளரிடமே இவ்வாறு இவர் கூறியிருந்தார்.

## உள்ளூர் உற்பத்தி பாழ்

காத்தன் குடியில் சூறுவளியால் பாதிக்கப்பட்ட 6000 நெசவாளர்களுக்கு நான்கு வருடங்களுக்கு மேலாகியும் இதுவரை நஷ்டஈட்டு நிவாரணப் பணம் எதுவும் வழங்கப்படவில்லை. இதனால் பல கைத்தறி நெசவாலைகள் மூடப்பட்ட நிலையிலுள்ளன.

இக்கைத்தறி நெசவாலைகளில் வேலைவாய்ப்பும் பெற்றிருந்த ஆயிரக்கணக்கான வாலிபர்களும், யுவதிகளும் இப்போது வேலை இழந்து பரிதாபகரமான நிலைக்குள்ளாகியுள்ளார்கள்.

உள்ளூர் உற்பத்திக்கு ஊக்குவிப்பு இன்மையாலும், சந்தைப்படுத்துவதில் ஏற்படும் பிரச்சனைகளாலும் நெசவாளர்கள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகிறார்கள். இதனால் எஞ்சியுள்ள கைத்தறி நெசவாலைகளும் மூடப்பட்டு வருகின்றன. இவற்றினால் இப்பகுதியிலுள்ள பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் வேலையில்லாப் பிரச்சனைக்குள்ளாக நேரிடுகிறது.

## இன்னுமொரு சர்வதேச விமானநிலையம்!

திருகோணமலையில் சீனக்குடாவில் உள்ள விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக்க திட்டங்கள் தயாராகின்றன. இதுசம்பந்தமான பேச்சுவார்த்தையை விமான நிலையங்கள் அதிகார சபை அரசாங்க உயர்மட்டத்துடன் நடத்தி முடித்துள்ளது.

திருகோணமலையில் எண்ணெய்க் குதாம்கள் பல வெளிநாடுகளைக் கவர்ந்திருக்கின்றன. இவற்றில் முதலீடு செய்வதற்கு பல வெளிநாடுகள் முன்வந்திருக்கின்றன. திருகோணமலையில் முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் ஒன்றை அமைப்பதற்கும் அரசாங்கம் ஆலோசித்து வருகிறதாம். இவற்றிற்கு இவ் விமான நிலையம் பேருதவியாக இருக்கும் எனக் கருதப்படுவதாலும். திருமலையில் சீமேந்து ஆலை ஒன்றை ஜப்பானின் உதவியுடன் நிர்மாணிப்பதற்கான வேலைகளும் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

# வறுமையில் உதித்த தத்துவத்தின் வித்தகன்

1818 மே மாதம் 5-ந் திகதி, ஜெர்மனியில் உள்ள ரைன்லாந்து மாகாணத்தில் மார்க்ஸ் பிறந்தான். ட்ரியர் என்ற இடத்திலுள்ள உயர் பள்ளியிலும், பொன், பெர்லின் சர்வகலாசாலைகளிலும் இவன் தன் உயர்கல்வியையும், பட்டப்படிப்பையும் மேற்கொண்டிருந்தான். லத்தின், கிறீக், ஜெர்மனி, பிரஞ்சு மொழிகளில் இவன் தேர்ச்சி பெற்றவன். தத்துவம், சட்டம், சாத்திரம், [illegible], [illegible] ஆகிய துறைகளை நன்கு பயின்றவன். இவற்றில் தத்துவசாத்திரத்திலேயே இவனுக்கு ஈடுபாடு அதிகம். கவிதா சக்தியும் இவனிடம் இருந்தது. ஜீனு என்ற சர்வகலாசாலைக்கு தத்துவம் பற்றி ஒரு ஆய்வுக்கட்டுரை அனுப்பியதற்காக இவனுக்கு கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டது. ஆனால் இப்பட்டத்தை இறுதிவரை மார்க்ஸ் பாவிக்கவே இல்லை. இக்காலங்களில் இவன் தனது அறிவுப்பார்வையை அகல விரித்திருந்தான். கெகல் என்ற தத்துவஞானியின் கருத்துக்களால் கவரப்பட்டிருந்தான்.

படிப்பை முடித்துக்கொண்டபோது தந்தையார் இறந்திருந்தமையால் வாழ்க்கைச்செலவுக்காக வேலைதேடவேண்டியதாயிற்று. எவருடைய கட்டுப்பாடுமில்லாமல் சுதந்திரமாக செய்யக்கூடிய வேலையையே இவன்மனம் நாடியது. இதனால் பத்திரிகைத் துறையை தெரிந்தெடுத்து, ஜெர்மனியில் 'ரைன்லாந்து கசட்' என்ற பத்திரிகை ஊடாக கருத்து வெளியிடலானான். இதனூடு மக்களுக்காகவே அரசு; அரசுக்காக மக்களில்லை என்ற கருத்தை விதைக்கத் தொடங்கினான். இதைக்கண்ட ஜெர்மனி அரசு ஆத்திரப்பட்டது. பலகட்டுப்பாடுகளை விதித்தது. இதனால் இப்பத்திரிகையை தொடரமுடியாமல் போயிற்று. இப்பத்திரிகையின் ஆசிரியர் பதவியில் இருந்து மார்க்ஸ் 1843 இல் விலகிக் கொண்டான். ஜெர்மனியில் அரச கொடுமைகள் வலுக்கவே இவன் நாட்டைவிட்டு வெளியேறத் துணிந்தான். அக்காலத்தில் பிரான்ஸ் ஜேர்மனியைவிட கொடுமை குறைந்த நாடாக விளங்கியது. இதனால் பிரான்ஸ் போய் அங்கிருந்துகொண்டு ரூஜ் என்பவனின் பணஉதவியுடன் ஒரு பத்திரிகையை நடாத்த எண்ணினான். இக்காலத்திலேயே மார்க்ஸ், தான் நீண்டகாலமாகக் காதலித்து வந்த ஜென்னி என்ற பிரபுவம்சப் பெண்ணை திருமணம் செய்து கொண்டான். 1843 இல் பரிஸிற்கு பத்திரிகை நடாத்த மனைவி சகிதம் புறப்பட்டிருந்தான்.

1844 இல் 'ஜெர்மன்—பிரஞ்சு மலர்' என்ற பெயரில் பத்திரிகை வெளிவந்தது. ஆனால், அக்காலத்தில் பிரபலமானவர்கள் இப்பத்திரிகைக்கு கட்டுரை எழுத மறுத்ததனால் ஒரு இதழுடனேயே இம்மலர் நின்றுபோயிற்று. இந்தக் குறுகியகால பத்திரிகை அனுபவம் மார்க்ஸுக்கு புதியஒரு சிந்தனையை முடுக்கிவிட்டிருந்தது. பத்திரிகை தாங்கிவந்த செய்திகளூடாக, அரசியல் முதலான' சகலமும் பொருளாதாரப் பிரச்சினைகளிலிருந்தே கட்டப்பட்டிருப்பதை உணர்ந்துகொள்ள முடிந்தது. இதனால் பொருளாதார அறிவின் அவசியத்தை உணர்ந்தான். இக்காலத்திலியே இவன், தான் பிற்காலத்தில் வகுத்த சமதர்மக் கொள்கைக்கு அடிகோலத் தொடங்கியிருந்தானெனலாம்.

பொருளாதாரம் பற்றிய நூல்களை படித்துவந்த மார்க்ஸ் அக்காலத்தில் பிரான்ஸில் செயற்பட்டுவந்த ரகசிய தொழிலாளர் சங்கங்களின் கூட்டங்களுக்கும் போய்வந்தான். அங்கு எதேச்சதிகாரத்தை வீழ்த்துவதுபற்றி விவாதிப்பான். அத்துடன் எந்தஒரு தத்துவமும் வரண்டதாக இராமல் நடைமுறைக்குரியதாக இருக்கவேண்டுமெனவும் வலியுறுத்தி வந்தான். இங்குதான் இவனது உற்றநண்பன் எங்கெல்ஸையும் சந்திக்க நேர்ந்தது.

பிரான்சில் வாழ்ந்த காலத்தில் கென்றிக் போன்ஸ்டைன் என்பவன் நடாத்திவந்த 'முன்னேற்றம்' என்ற பத்திரிகைக்கு கட்டுரை எழுதிவந்தான் மார்க்ஸ். இவனது கட்டுரைகளுக்கு ஜெர்மன் அரசு பலமான அடிகளை வாங்கியது. இதனால் இவ்வரசு விழிப்படைந்து, இப்பத்திரிகை தமது நாட்டுக்குள் நுழையாதபடி தடைபோட்டது. அத்துடன் பிரான்ஸ் அரசை, 'முன்னேற்றத்தை' தடைசெய்யும்படியும், மார்க்சையும் ஏனையோரையும் நாடுகடத்தும்படியும் கேட்டுக்கொண்டது. இதனால் மார்க்சுக்கு 24 மணிநேரத்தில் பிரான்சைவிட்டு வெளியேறும்படி உத்தரவு வந்தது. அவன் 1845 பெப்ரவரி மாதம் பெல்ஜியம் போய்ச் சேர்ந்தான். ஆனால் இந்த அரசாங்கத்தையும், ஜெர்மனி அரசு மார்க்சை நாட்டைவிட்டு விரட்டும்படி வற்புறுத்தியது. இதனால் ஆத்திரமுற்ற மார்க்ஸ் தனது ஜேர்மனிய பிரசாஉரிமையை துறந்து கொண்டான்.

இவ்வாறு பலதடவைகள் அரசின் கொடுமைகளால் மார்க்ஸ் நாடு கடக்க வேண்டியிருந்தது. 1845இல் பரிசிலிருந்து பெல்ஜியம் வந்த இவன் 1848இல் பெல்ஜியத்திலிருந்து பிரான்சுக்கும், பின் பிரான்சிலிருந்து கோலோனிற்கும் நாடுகடந்தான். 1849 இல் கோலோனிலிருந்து வெளியேற்றப்பட மீண்டும் பிரான்சுக்கு வந்தான். இதேஆண்டு பிரான்சுலிருந்தும் வெளியேற்றப்படலானான். இம்முறை இங்கிலாந்து சென்றான். இங்கிலாந்திலேயே தன் இறுதிக்காலம்வரை வாழ்ந்தான். இவனுடன் இவனது மனைவியும் பிள்ளைகளும் அல்லோல கல்லோலப்பட்டனர்.

என்ன நேர்ந்தபொழுதும் இவன் தனது அறிவுச் சேகரிப்பிலும், கருத்து வெளிப்பாட்டிலும், விவாதங்களிலும் சளைக்காமல் உழைத்துவந்தான். கோலோன் நகரில் இருந்தபொழுது 'புதிய ரைன்லாந்து கசட்' என்ற பெயரில் பத்திரிகை நடத்தி வந்தான். முதலாளித்துவத்தின் தன்மைபற்றி பல புள்ளி விபரங்களுடன் ஆணித்தரமான கருத்துக்களை தாங்கிவரவே இப்பத்திரிகைக்கும் தடை உத்தரவு பிறந்தது. இலண்டனில் வசித்த காலத்திலும் இவன் ஜெர்மனியில் உள்ள கம்பேர்க் நகரில் ஒரு பத்திரிகை வெளிவரச் செய்திருந்தான். இதுவும் பத்து மாதங்களில் தடைப்பட்டது. ஆயினும் அவன் விடாப்பிடியாக நின்று அமெரிக்காவில் வெளிவந்த 'நியூயோர்க் ரிபியூன்' என்ற பத்திரிகைக்கு எழுதி தனது ஆக்கங்களை வெளியிட்டுவந்தான். இக்காலங்களில் இவனது குடும்பவாழ்க்கை மிகவும் பயங்கரமானதாக இருந்தது. வீட்டில் இருந்த தட்டுமுட்டுச் சாமான்கள் யாவும் விற்கப்பட்டன. குழந்தைகளின் பழைய சப்பாத்துக்களைக் கூட அடைவுவைத்தான். தான் எழுதிய கட்டுரைகளை தபாலில் அனுப்பப் பணமில்லாது தனது மேல் 'கோட்டைக்'கூட அடைவு வைக்க வேண்டியிருந்தது.

இத்தனை மத்தியிலும் அவன் தொழிலாளரை விழிப்படையச்செய்து, புரட்சி நெறிக்குட்படுத்த அயராமல் உழைத்திருந்தான். 1847இல் தாபிக்கப்பட்ட சர்வதேச பொதுவுடைமைச் சங்கத்தின் மாநாடுகளுக்குச்சென்று தொழிலாளரின் வர்க்க உணர்வை வெளிக்காட்டிப்பேசி, சமூகமாற்றத்தின் அவசியத்தையும் வலியுறுத்தியிருத்தான். இச்சங்கத்தாரின் வேண்டுகோளுக்கிணங்க தயாரிக்கப்பட்டதே மிகவும் முக்கியத்துவமுடைய 'கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை' ஆகும். இச்சங்கத்தின் வீழ்ச்சிக்குப் பின் 1864 இல் முதலாவது அகிலம் உதயமானது. இதன் மாநாட்டிலும் மார்க்ஸ் கலந்துகொண்டு, தனிச்சொத்துடைமையை ஒழிப்பதற்கு செய்யவேண்டிய ஆரம்பக் கைங்கரியங்கள்பற்றி எடுத்துக் கூறியிருந்தான்.

இறுதியாக, இங்கிலாந்தில் வாழ்ந்த காலத்தில், பிரித்தானியாப் பொருட்காட்சிச்சாலை நூல்நிலையத்தைப் பயன்படுத்தி அவன் செய்துவந்த ஆழ்ந்த ஆராய்ச்சியின் விளைவே 'மூலதனம்' என்னும் பிரசித்திபெற்ற நூலாகும். இந்நூலாகத்துக்கு சுமார் 1500 நூல்களை இவன் வாசித்திருந்தான். தனிச்சொத்துடைமை அமைப்பானது எவ்வகையில் ஏழைமக்களை ஏய்த்துப் பிழைக்க வழிவிட்டுத் தருகிறதென விஞ்ஞான பூர்வமாக எடுத்துக் காட்டுகிறது இந்நூல். தனது 65 வது வயதில் காலமானார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குடியேற்றச் சதி :

- சேருவாவிலை
- பலகாரம்சுட்டமடு
- அல்லை
- விளாங்குளம்
- வாஞறு வரிசையில்......

# கொம்பநாச்சிக்கும் குறி!

**திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஒரு வளம் மிக்க பகுதி கொம்பநாச்சி. பயிர்ச் செய்கைக்கும் மாடு வளர்ப்பிற்கும் இது பெயர்பெற்ற இடம். இஸ்லாம் மதம் சார்ந்தவர்களே இங்கு அதிகம்.**

**இப்பகுதி வனவிலங்குப் பாதுகாப்புப் பிரதேசமாகத் திடீரெனப் பிரகடனப் படுத்தப்பட்டது. இத்திடீர் நடவடிக்கையைக் கண்டு அதிர்ந்து தாம் வளமாக்கிய நிலத்தை விட்டு நகர மறுத்த மக்கள்மீது காடைத்தனம் காட்டப்பட்டிருக்கிறது.**

**இதையடுத்து இப்பிரதேசம் சிங்களக் குடியேற்றச் சதிக்கு பலியாகப்போகிறதா?**

திருகோணமலை மாவட்டத்தின் தென் எல்லைப்பகுதியில் மகாவலிகங்கை இரண்டாகப் பிரிகிறது. இதில் ஒரு கிளை மூதூரில் கடலுடன் கலக்கிறது மற்றையது வெருகலில் கலக்கிறது. மகாவலியின் தாய்நதி இரண்டாகப் பிரியுமிடத்தில் அமைந்துள்ள வளமிக்க கிராமம் தான் கொம்பநாச்சி. இக் கிராமத்தை அடுத்து வெருகல் அணைக்கட்டுவரை வந்தால் பவனை, வெல்ல ஆகிய கிராமங்கள் அமைந்திருக்கக் காணலாம். இப்பகுதி மூதூரிலிருந்து 25 மைல்களில் உள்ளது.

## நிலம் வளமாதல் ...

1940-ம் ஆண்டு செப்டம்பரில் அரச உத்தரவின் பேரில் திரு. எஸ். சிவராமலிங்கம், திரு. ஜெ. எஸ். ஜெ. ரிச்சார்ட் திரு. லியனகே ஆகிய நில அளவையாளர்கள்இப்பகுதிக்கு அனுப்பப்பட்டிருந்தனர். இக் காணிப்பகுதி இவர்களால் 3 ஏக்கர் கொண்ட கண்டங்களாகப் பிரிக்கப்பட்டது. இதனுல் கொபநாச்சியில் 67 கண்டங்களும், பவனையில் 42 கண்டங்களும், வெல்லவில் 45 கண்டங்களுமாக மொத்தம் 154 கண்டங்கள் உருவாக்கப்பட்டன.

இக்கண்டங்கள் மகாவலி நதியோரத்திலிருந்து 80, 85, 90 யார் அகலம் கொண்டனவாக இருக்கின்றன. மகாவலியின் வண்டல்மண் சேர்ந்த இருவாட்டி மண்ணை வளமாக இக்கிராமங்கள் கொண்டிருக்கின்றன. நல்ல நீர்ப்பாய்ச்சலையும் வளமான நிலப்பரப்பையும் சொத்தாக உடைய இப்பகுதி பயிர்ச்செய்கைக்கு பெயர்போய் இருந்தது.

கொட்டியாரப்பற்று, கதிரவெளி, வாகரை, ஒட்டுமாவடி, வாழைச்சேனை, ஏருவூர் போன்ற பகுதிகளில் வாழும் விவசாயிகள் தமது பிரதேசம் தோட்டப்பயிர்ச் செய்கைக்கு உகந்த மண்வளத்தையும், நீர்ப்பாய்ச்சலையும் போதியளவு கொண்டிராமையால் இப்பகுதிகளுக்கு வந்து பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்தனர். பல வருடங்களுக்கு முன்பிருந்தே இந்நிலத்தை நாடிவந்த இம் மக்கள், புகையிலைப் பயிர்ச் செய்கையில் மும்முரமாக ஈடுபட்டு வந்தனர். இந்த விவசாயிகளின் உற்பத்தி முயற்சியால் வருடாவருடம் ஒருகோடி ரூபாவரை புகையிலை உற்பத்தி செய்யப்பட்டு வந்ததாக கணிப்பிடப்பட்டிருக்கிறது. பயிர்ச்செய்கைப் பிரதேசம் தவிர்ந்த சதுப்பு நிலங்களிலும், புல்வெளிகளிலும் மாடு வளர்ப்பும், நடந்துவந்தது. பல பெரிய மாட்டுத்தொழுவங்கள் இப்பகுதிகளில் இருந்தன தரமான வண்டில் மாடுகள் இங்கிருந்து இதர இடங்களுக்கு கொண்டு செல்லப்படுவது வழக்கம்.

## அரசு வைத்த குறி

ஏழை விவசாயிகளுக்கு வளமூட்ட முயன்ற இந்தப் பூமி மீது தான் அரசாங்கத்தின் குறி போய் விழுந்திருக்கிறது.

1980-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8-ம் திகதி கொழும்பில் வனபரிபாலனம் பற்றி பேசுவதற்காக ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. இதில் காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் பிரதிநிதியும், வனபரிபாலன, மரக் கூட்டுத்தாபன பிரதிநிதிகளும் மிருக பாதுகாப்பு இயக்குனர் திரு.லயன் டீ அல்விசும் கலந்து கொண்டார்கள். இவர்கள் கொம்பநாச்சிப்பகுதியில் மகாவலியின் இருமருங்கிலுமிருந்து 200 மீற்றர் தூரப் பிரதேசத்தில் செய்யப்பட்டு வரும் புகையிலைச் செய்கையை தடுக்கவேண்டுமென தீர்மானமெடுத்தனர். இத் தீர்மானிப்புக்கு முன்னேடி நடவடிக்கைகள் எதுவுமே எடுக்கப்பட்டிருக்கவில்லை. உரிய பகுதி மக்களிடமோ, உரிய அரசாங்க நிர்வாகத் தாரிடமிருந்தோ, நிறுவனங்களிடமிருந்தோ இதுபற்றிய எதுவித ஆலோசனைகளையோ அனுமதிகளையோ பெறவில்லை. ஒரு சில அதிகாரிகளின் தன்னிச்சைத் தீர்மானமாகவே இது தெரிந்து வருகிறது.

இத்தீர்மானம் பின்னர் திருகோணமலை, மட்டக்களப்பு பொலநறுவை மாவட்ட அரசாங்க அதிபர்கட்கு அறிவிக்கப்பட்டது. இப்பகுதியின் முக்கியத்துவத்தையும் தீர்மானத்தின் முறைகேட்டையும் உணர்ந்து திருகோணமலை அரசாங்க அதிபரும், வேறு சிலரும் இம்முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். இந்த அதிர்ச்சி முடிவை கேள்வியுற்ற அப்பகுதி மக்கள் தாம் வளமாக் கிய காணிகளை விட்டு அசைய மறுத்திருந்தனர்.

## காடையர்களின் அட்டகாசம்

நிலைமை இவ்விதமிருக்க அண்மையில் பொலநறுவைப் பகுதி பாதுகாப்பாளரான பி. ஏ. முத்துபண்டாவும், சுமார் பதினைந்து காடையர்களும் இப் பிரதேசத்துள் புகுந்து ஏழை விவசாயிகளை நையப்புடைந்தார்கள். உடமைகளை உடைத்தெறிந்தார்கள். சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான புகையிலையை அபகரித்தார்கள் அத்துடன் விவசாயிகளில் ஐவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தியும் காட்டினர்கள் இங்கு, மூதூர் நீதிமன்ற எல்லைக் குட்பட்ட இப்பிரச்சனையை பொலநறுவை நீதிமன்றத்துக்கு எடுத்துச் சென்ற விசித்திரமும் நடந்திருக்கிறது.

## மக்கள் அவதிப்படுகிறார்கள்

கொட்டியாரப்பற்று, கதிரவெளி, வாகரை, ஒட்டுமாவடி, வாழைச்சேனை, ஏருவூர் போன்ற பகுதியிலிருந்து இங்கு விவசாயம் மேற்கொண்ட விவசாயிகள் தாம் பெற்ற கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியாமலும், இழந்த தமது உடமைகளை மீட்டுக்கொள்ள முடியாமலும், தொடர்ந்து நீதி மன்றத்திலும், இதர திணைக்களங்களிலும் தொடர்பு கொண்டு தமது அவலத்தை போக்கிக்கொள்ளவும் பொருளாதார வசதியற்று திண்டாடுகின்றனர். இதில் ஒட்டுமாவடியைச் சேர்ந்த அகமது என்ற ஓர் இஸ்லாமிய விவசாயி தனது விவசாயப்பொருள் முழுவதையும் பறிகொடுத்து கைது செய்யப்பட்ட தொழிலாளர்களையும் பிணையில் விடுவித்துக் கொள்ள வசதியற்று தனது குடியிருந்த வீட்டையே விற்று செலவு செய்திருக்கிறார். அந்த ஏழை விவசாயிக்கு ஏதும் பலன்கிடைப்பதாயில்லை.

## தொடராக நடந்துவரும் துரத்தியடிப்புகள்

திருகோணமலை மாவட்டத்தில், இவ்வாறு பாமர மக்களை அவர்களது காணிகளிலிருந்து துரத்தியடிக்கும் வேலைகள் தொடராக நடந்துவருகின்றன விளாங்குளம் பகுதியில் வாழ்ந்து வந்த மக்கள் அகழ்வு ஆராய்வு திட்டத்தினுல் வெளியேற்றப்பட்டு, இன்று சிங்கள மக்களின் குடியிருப்புக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. கிண்ணியா வாஞறு பகுதியிலும் இதே போன்று அகழ்வு ஆராய்வுக்கென குடியிருந்த சிலரை எழுப்பிவிட்டு அப்பகுதி காணிகளை ஆக்கிரமிக்கின்றனர். அப்பகுதி மக்களும் தம்மிடம் எஞ்சியுள்ள உடைமைகளையும் விற்றுவிட்டு இன்று நடுத்தெருவில் நிற்கின்றனர். கந்தளாயிலும் பலகாரம் சுட்டமடு என்று அழைக்கப்படுகின்றவளமான வேளாண்மை செய்கை நிலங்கள் இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குட் பட்டிருக்கிறது. அந்தப் பகுதி விவசாயத்தை நம்பி வாழ்ந்த மக்கள்இன்று பல பகுதிகளுக்கும் இடம் பெயர்ந்து சென்றுள்ளனர்.

இந்த தொடரிலேயே கொம்பநாச்சியிலும் தமிழ் பேசும் மக்களை விரட்டிவிட்டு சிங்களவரை குடியேற்றும்எண்ணம் இருப்பதை ஊகிக்கலாம்.


அதற்கு உதவியாக இருக்கும் பொருட்டே இப்போது பொலநறுவை பகுதியிலிருந்து மூதூருக்கு புதிய போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்வதும் அதற்காக புதிய வீதிகள் நிர்மாணிக்கப்படுவதும் நடைபெறுகிறது. வெகு காலமாக இழுபறிப்பட்ட மட்டக்களப்பு மூதூர் பிரதான வீதியில் இருக்கும் வெருகல் ஆற்றுக்கு பாலம் அமைக்கும் திட்டம் இப்போது கைவிடப்பட்டு பொலநறுவை— மூதூர் போக்குவரத்திற்கு உருவாக்கப்படும் வீதிக்கு ஏற்றாற் போல் ஒரு இடத்தில் பாலம் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பன்நெடுங்காலமாக திருகோணமலை — மூதூர் பிரதான வீதியாக இருந்த வீதி நீண்டகாலமாக எதுவித திருத்த வேலைகளும் மேற்கொள்ளாமல் பிரதான போக்குவரத்து சாதனங்களையும் இப்பகுதி போக்குவரத்துக்கு ஈடுபடுத்தாமல் இருப்பதுடன் இந்த வீதியில் அமைந்துள்ள உப்பாறு, கங்கை மூதூர் போன்ற துறைகளுக்கும் பாலம் கட்டும் முயற்சியும் கைவிடப்பட்டுள்ளது. இதனை கைவிட்டுவிட்டே கந்தளாய் ஊடாக மூதூர் போக்குவரத்து ஆரம்பித்து குருநாகல், கொழும்பு, கண்டி போன்ற இடங்களுக்கிடையிலான நேரடி போக்குவரத்து நிர்மாணிக்கப்பட்டது. இந்தப் போக்குவரத்து மூதூர் பகுதியில் சிங்களக் குடியேற்றக்காரருக்கு ஊக்குவிப்பாக அமைகிறது.

## இன்றைய மனப்போக்கு

பல ஆண்டு காலமாக பயிர் செய்துவந்த விவசாயிகளும், மாடு வளர்ப்பில் ஈடுபட்டுவந்தோரும் இந்நாட்டு அதிகாரிகளின் இனத்துவேஷத்தையும் இனக்குரோதச் சட்டங்களையும் பாரபட்ச நடவடிக்கைகளையும், இவற்றிற்கெல்லாம் துணைநிற்கும் அரசையும் கண்டு ஆத்திரப் படுகிறார்கள். அரசாங்கத்தினுல் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினதும், இயக்கங்களினதும், நிறுவனங்களினதும் பாரமுகத்தை அனுபவித்து அவற்றைப்பற்றி இப்போது நன்ருகப் புரிந்து கொண்டுள்ளனர்.

இம்மக்கள், தமிழ்பேசும் மக்களின் இன்றைய தலைமைக்கு இப்படி ஒரு பிரச்சனை இருப்பதாக தெரிந்திருக்குமோ என்று கூட நினைக்கிறார்கள். தமிழ் பேசும் இஸ்லாமியரின் பிரச்சனைகள் வேறு, ஏனைய தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகள் வேறு என பிரச்சாரம் செய்யும் இஸ்லாமியக் கனவான்கள் எங்கே என்று கேட்கிறார்கள். ஒருவர் சபாநாயகராயிருந்தென்ன, இஸ்லாமிய விவகார அமைச்சர் ஒருவர் இருந்தென்ன, இன்னும் எத்தனை அமைச்சர்கள் தான் இருந்துதானென்ன இந்தப் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாமலிருக்கிறது, எனவும் கூறுகிறார்கள். பெரும் பெருஞ்சாளிகளின் முன்னேற்றத்துக்காக இரவும் பகலும் பாடுபடும் இந்தப் பச்சோந்திகள் காட்டிய வித்தைகள் போதுமென்ற மனநிலை இப்போது இவர்களிடம் தோன்றி விட்டது.

**இங்கு வட்டமிடப்பட்ட பகுதியில் பிரத்தியேகமாக காட்டப்பட்டிருக்கும் கறுத்த பகுதிகளிலேயே ஆக்கிரமிப்பு நடைபெற்றுள்ளது.**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# உலக சமாதானத்தை

▶ "கம்யூனிசத்தை எதிர்க்கும் எந்த ஒரு நாட்டுக்கும் நாம் உதவத் தயார்"

▶ "உலக கடலாதிக்க உரிமை அமெரிக்கா வுக்குமட்டுமே உண்டு. இது எமது நாட்டு மக்களின் இரத்தத்துடன் கலந்தது."

▶ "சமாதானம் வலிமையால் வருவது; பலவீனத்தின் இருப்பிடமாக முடியாது"

இவை அமெரிக்க ஜனதிபதி உதிர்த்த 'மணிமொழிகள்.' கம்யூனிசத்தைக் கண்டு கலங்கிப் போகும் ரொனல்ட் றீகன், 2-ம் உலக மகா யுத்தத்தில் உதவிய 'நியூ ஜேர்சி' என்ற யுத்தக்கப்பலை புதுப்பித்து, வெள்ளோட்டத்திற்கு விட்ட வைபவமொன்றிலேயே தமது கடலாதிக்கம் பற்றி பிரஸ்தாபித்திருந்தார். ஏனைய நாடுகளில் ஆதிக்கம் செலுத்துவதற் கென்றே அல்லும் பகலும் [illegible]

கடந்த வருடம் நவம்பர் மாத முற்பகுதியில் வெள்ளை மாளிகையிலிருந்து வெளியிடப்பட்டதே இந்த 'சமாதான' பற்றிய அவரது 'கருதுகோளாகும்.'

## அமெரிக்காவின சுதந்திரமும் மக்களின் வாழ்நிலையும்

சோசலிசக் கொள்கைகள் மீது இன்று பல நாடுகள் கொண்டிருக்கும் ஈர்ப்பை தெரிந்தோ என்னவோ தனது நாட்டுச் சுதந்திரம் பற்றி அடிக்கடி றீகன் அலட்டிக் கொள்ள வேண்டியிருக்கிறது. அண்மையில் கூட பத்திரிகையாளர்களிடம் இப்படிக் கூறியிருக்கிறார். "எமது வழிமைய சுதந்திரப்பாதையை-சுயேச்சையான வர்த்தகத் தொடர்பை - ஜனநாயகப் பாதையைப் பின்பற்றி மக்களின் வாழ்க்கைத் தர உயர்வில் முன்னேற்றம் கண்டுள்ள மக்களின் ஆனந்த வாழ்வைக் கண்டு அனுபவிக்கின்ற புதிய மற்றும் வளர்முக நாடுகளையும்"—இவ்வாறு அமெரிக்காவின் 'ஆனந்த', வாழ்வையும், அன்றாடம் பசி, பட்டினியால் அழுது புலம்பும் வளர்முக நாடுகளின் 'ஆனந்த' வாழ்வையும் பற்றிப் பேசியிருக்கிறார், றீகன்.

அமெரிக்க மக்களின் வாழ்நிலையோ, அமெரிக்காவிலுள்ள டெட்ரொயிட் என்ற நகரின் மேயர் யங் வெளியிட்ட அறிக்கைப்படி வேறு விதமாக இருக்கிறது. இந்நகரில் பட்டினி நெருக்கடி காரணமாக அவசர கால நிலைமை பிரகடனம் செய்யப் பட்டிருக்கிறது. இங்கு வதியும் 12 இலட்சம் தொழிலாளரில் 3 இலட்சத்தினருக்கு வேலையில்லை. இப்பகுதியில் உள்ள மோட்டார்கார் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை இரண்டு வருடங்களாக மூடப்பட்டிருக்கிறது. நகரின் $\frac{1}{5}$ பேருக்கு போஷாக்குணவு கிட்டுவதில்லை. இதைத் தான் றீகன் தான் கண்ட அமெரிக்க மக்க[illegible]கிறார்!

## உண்மை நிலையை மூடி மறைக்க கையாளும் வழி

முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் நிறுத்தப் பட்டிருக்கும் சமூகம் இப்படியானவற்றிற்கு முகம் கொடுத்து அனுபவிக்க வேண்டியது தவிர்க்க முடியாதது. ஆனல் இவற்றையெல்லாம் மூடி மறைத்து. சுதந்திரம், ஆனந்தம் பற்றி நல்ல வசனம் பேசி நடித்துக் காட்ட வேண்டியது அந்தந்த நாட்டு தலைவர்களினது தலையாய பணியாய் அமைகிறது. இந்தப் பணிக்கு றீகன் தகுதி குறைந்தவரா?

பசப்பு வார்த்தைகளைக் கக்கி ஏனைய நாடுகளில் தமது செல்வாக்கை செலுத்துவதன் மூலம் ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதையே முதலாளித்துவ நாடுகளும் ஏகாதிபத்திய நாடுகளும் குறிக்கோளாக உடையன என்பது புதிய விடயமல்ல.

இந்த ஆதிக்கச் செலுத்தலுக்கு அமெரிக்கா போன்ற ஏகாதிபத்தியம் தனது உள்நாட்டு அழுகல்களை அப்படியே மூடி மறைத்து ஏனைய நாடுகளின் கவனத்தை வேறு திசைக்குத் திருப்பி வைத்து விடுகிறது. இத் திசைத்திருப்பலுக்கு இவை தமக்கென ஒரு மேதா விலாசத்தை தேடிக் கொள்கின்றன அமெரிக்கா முன்னர் சந்திரனுக்கு ஆளனுப்பி விலாசம் காட்டியது. இப்போது அணு ஆயுதத் துறையில் தாமே வலிமையானவர்களென காட்ட படாதபாடு படுகிறது.

## அணு ஆயுத உற்பத்திக்கு அதிகளவில் செலவு!

சுமார் 70 இற்குப்பின் அமெரிக்காவின் போக்கை நோக்கும் போது ஆயுத உற்பத்தியிலும், விநியோகத்திலும், அவற்றிற்கான ஊக்கு[illegible] செலுத்தி வந்திருப்பதைக் காணலாம். இப்போக்கின் உயர்ந்த கட்டமாகவே இன்

## 40,000 எல்சல்வடோர் மக்களையும் 78,000 பலஸ்தீனரையும் கொல்ல அமெரிக்கா ஆயுதங்களை வழங்கியது!

றைய அணு ஆயுத பேச்சு வார்த்தைகள் இடம் பெறுகின்றன.

அமெரிக்கா மேற்கொள்ளும், எந்த ஒரு சமத்துவ சமதர்ம ஆட்சிக்கு எதிரான நடவடிக்கைகளுக்கும் தனக்கு பக்க பலமாக சில நாடுகளை அரவணைத்து வைத்திருப்பது கண்கூடு. இங்கு பிரித்தானியா, பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி ஜப்பான் முதலானவை முதன்மை வகிக்கின்றன. இவற்றுடன் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க பகுதிகளில் உள்ள அநேக வளர்முக நாடுகளும் துதிபாடி தம்மை இரையாக்கி வருகின்றன.

இந் நாடுகளுக்கு அமெரிக்கா 'கம்யூனிசம் ஒரு கரடி' எனப் பயமுறுத்தி அதிலிருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்களென்று 'அறிவுரை' வழங்கியும் வந்திருக்கின்றது. முதலாளித்துவத்தின் மேடைகளாயும், நிலப்பிரபுத்துவத்தின் அபிமானிகளாயும் திகழும் இந்நாடுகளில் ஏற்கனவே இருக்கும் கம்யூனிச எதிர்ப்பியல்பிற்கு, அமெரிக்க 'அறிவுரை' எண்ணெய் வார்த்ததாகிறது.

## வளர்முகநாட்டு ராணுவச் செலவு அதிகரிப்பு!

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு அமெரிக்கநிர்வாகம் தனது வேலையை முடுக்கி விடுகிறது. நாட்டைப் பாதுகாத்துக் கொள்ளும்படி அறிவுறுத்தி, இதற்காக தனது ஆயுதங்களை வாங்கும்படி உலகச் சந்தையில் நின்று கூவுகிறது, இந்தப் பொறிக்குள் வளர்முக நாடுகள் அகப்பட்டிருப்பதை அந் நாடுகளிலான ராணுவச் செலவினங்கள் துல்லியமாகத் தருகின்றன. உலக ராணுவச் செலவினங்களில் காணப்படும் வளர்முக நாடுகளின் பங்கு 9% இலிருந்து 16% ஆக அதிகரித்துள்ளது. இது ஆண்டொன்றுக்கு 80,000 பில்லியன் டொலர் அதிகரிப்பாகும்.

அமெரிக்காவில் ஆயுத விற்பனை பற்றி 'பினன்சல்ரைம்ஸ்' என்ற சஞ்சிகை வெளியிட்ட தகவலின்படி 25-30 பில்லியன் டொலர் ஆயுதங்களை அமெரிக்கா விற்பனைசெய்ய உள்ளதெனத் தெரியவருகிறது.

## ஆயுதங்கள் தந்த படு கொலைகள்

விற்பனையான ஆயுதங்களெல்லாம் எவ்வகையான பயன் பாட்டிற்கு உதவின என்பதை கடந்தகாலம் எமக்கு மறைத்துவைக்கவில்லை. அமெரிக்க ஆயுதங்களின் உதவியுடன் எல்சல்வடோரில் இது வரையில் சுமார் 40,000 பேர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். வயோதிபர், இளைஞர், யுவதிகள், சிறுவர், குழந்தைகள், என்று அனைவருமே ஈவிரக்கமின்றி சுட்டுத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். பல கிராமங்கள் கூட நிர்மூலமாக்கப்பட்டிருக்கின்றன. மத்திய கிழக்கின் சமாதானத்துக்கு சவாலாக விளங்கும் இஸ்ரேல் பாலஸ்தீனர்மீது அவிழ்த்து விட்ட வெறியாட்டங்களில் இதுவரையில் 78,000 பேர் துடியாய்த் துடித்து மாண்டார்கள். இந்தவரிசையில், அங்கோலாவை ஆக்கிரமிக்கும் தென்னாபிரிக்காவிற்கும் அமெரிக்க ஆயுத உதவி கிடைத்து வருவதைக் காணலாம்.

இவ்வாறு அமெரிக்கா 32 நாடுகளில் வைத்திருக்கும் 1500 இராணுவத்தளங்களும் என்ன நோக்கில் செயற்படக் கூடியவை என்பது புலனாகிறதல்லவா?

## அணு ஆயுத கட்டுப்பாட்டுப் பேச்சுக்கள்

இன்று, கம்யூனிச எதிர்ப்பு சுலோகத்துடன் ஆயுதஉற்பத்தியிலும் விற்பனையிலும் கரிசனை காட்டி, உலகில் தனக்கென ஒரு 'பெயரை' நிலை நாட்ட விரும்பும் நாடாக அமெரிக்கா இருக்கிறது. இதன் பாதையில் இன்று நிலவும் அணு ஆயுதக் கட்டுப்பாடுபற்றிய பேச்சுவார்த்தைகள் பிரதானமான மைல் கல்லாகும்.

அணு ஆயுதங்கள் உலகின் அழிவை சில நிமிடங்களில் தரக்கூடிய வல்லமை உடையன. இதனுல் இவற்றின் உற்பத்தியைக் கட்டுப்படுத்தவும் குறைக்கவும் தூண்டவேண்டிய அவசியம் உலக நாடுகளுக்கு ஏற்பட்டது. இந்த நோக்கிலேயே முதலாவது அணு ஆயுத கட்டுப்பாட்டு ஒப்பந்தம் (SALT 1) 1972இல் ஏற்படுத்தப்பட்டது. இதனை சோவியத் சார்புடைய 'வார்சோவ்' நாடுகளும், அமெரிக்க சார்புடைய 'நேற்ரோ' நாடுகளும் செய்து கொண்டன. கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளையும், நீர்மூழ்கி ஏவுகணைகளையும் உற்பத்திசெய்வதைக் கட்டுப்படுத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அமெரிக்கா அச்சுறுத்தும்?

தும் வகையில் ஒப்பந்தம் அமையப்பெற்றது.

இவ்வொப்பந்தத்தை தொடர்ந்து 1979இல் இரண்டாவது அணு ஆயுத கட்டுப்பாட்டு ஒப்பந்தம் (SALT2) ஏற்படுத்தப்பட்டது. இதன்படி சோவியத், அமெரிக்கா ஆகிய இரு தரப்பினரும் வைத்திருக்கக்கூடிய ஆகக் கூடிய அணு ஆயுதங்களின் மொத்த எண்ணிக்கை 2, 400 அலகுகள் ஆகியது. அத்துடன் 1981 ஜனவரி 1இற்குப்பின் இவ் வெண்ணிக்கை 2,250 ஆக குறைதல் வேண்டுமென வும் வலியுறுத்தியது. இவ்வலியுறுத்தலே நிலேநாட்டுவதற்கு சோவியத் 250 அலகு அணு ஆயுதங்களேயும், அமெரிக்கா 30 அலகு ஆயுதங்களேயும் கலேக்கவேண்டியிருந்தது.

## கிளப்பிவிட்ட புதிய புரளி!

நிலமை இவ்வாறு படிப்படியாக ஆயுதப் பரிகரணத்தின் பக்கம் சாய்ந்து வர அமெரிக்கா கிளப்பிவிட்ட புரளி ஒன்றினுல் இன்று பெரும் நெருக்கடி நிலே தோன்றியிருக்கிறது. சோவியத் அணு ஆயுத வல்லமையில் அமெரிக்காவை விட முன்னணியில் நிற்பதாக காட்டரும் அவருக்குப் பின் வந்த றீகனும் கருத்து வெளியிட்டிருந்தார்கள்.

அமெரிக்கா, சோவியத் ஆகிய முகாம்களில் இருபக்க அணு ஆயுத நிபுணர்களும் நேரில் சென்று பரிசீலித்து நுணுக்கமாக ஆராய்ந்து, இரு பக்கமும் அண்ணளவான சம நிலே இருப்பதாக குறிப்பிட்ட பின்பே மேற்படி ஒப்பந்தம் கைச்சாத்தாகி இருந்தது. இது இவ்வாறிருக்க திடீரென சோவியத் ஓரிரு வருடங்களில் வலிமை பெறுவதென்பது எப்படிச் சாத்தியமாகுமென்று நிபுணர்கள் கேள்வி எழுப்புகிருர்கள். அணு ஆயுதத்தை உற்பத்திசெய்யும், காலம், செலவு தொழில்நுட்பம், உழைப்புச் சக்தி முதலான வற்றை வைத்துக் கணித்துக் கூறும் கூற்ருக காட்டரினதும், றீகனினதும் கருத்துகள் அமைய முடியாதெனவும் இவர்கள் மறுத்துரைக்கிருர்கள்.

அமெரிக்காவின் வெளிவிவகாரக் காரியதரிசியாக அலெக்சாண்டர்கெய்க் இருந்தபோது, சோவியத் யூனியன் அணு ஆயுத வல்லமையில் முன்னிற்பதாக அமெரிக்கா கூறும் கூற்று ஒரு கட்டுக்கதை என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். 1981 யூன் 5இல் நடந்த பத்திரிகையாளர் மாநாடொன்றிலேயே இவர் இவ்வாறு ஒப்புக்கொண்டிருந்தார்.

## 572 ஏவுகணேகளே தயாரித்து, சோவியத்தை நோக்கி நகர்த்த றீகன் திட்டம்

### ஏவுகணேகளேத் தயாரிக்கும் திட்டம்

றீகன் நிர்வாகம் இந்தக் கட்டுக்கதையை அவிழ்த்து விட்டுவிட்டு 572 ஏவுகணேகளே 83இல் மேலதிகமாக உற்பத்தி செய்து சோவியத்தை நோக்கி நகர்த்த இருப்பதாக அறிவித்திருக்கிறது. இவ் ஏவுகணேகள் ஏவப்பட்ட அடுத்த 6 நிமிடங்களில் சோவியத்தை அடைந்து அழிக்கக் கூடிய சக்தி வாய்ந்தன.

இம் மேலதிக உற்பத்திக்கு முனேவதன் மூலம் அமெரிக்கா, 72இல் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் (SALT 1) 1ஆவது பிரமாணத்தையும், 79இல் செய்யப்பட்டதன் (SALT2) 4ஆவது பிரமாணத்தையும் மீற முயற்சிக்கிறது.

இந்த உற்பத்தியைக் கொண்டு, உலகில் தான்தான் அணு ஆயுத உற்பத்தியில் வலிமை கூடியதாக காட்ட எத்தனிக்கிறது. இவ்வலிமையை வைத்துக் கொண்டே உலகில் 'சமாதானத்தை' கொண்டு வர முடியுமென்பது தான் றீகன் வகுத்துள்ள சித்தாந்தம். இதன்மூலம் உலகின் கடலாதிக்கத்தை ஏற்படித்தி இருப்பதுபோல் அணு ஆயுதம் தரும் ஆதிக்கத்தையும் ஏற்படுத்திக் கொள்ளலாம் என்பதே றீகனின் கனவு.


றீகனின் மதிகெட்ட நிலேயால் உலகில் உருவாக்கக்கூடிய பேரழிவை ஒழிப்பதற்காக இன்று பல நாடுகளிலுமிருந்து எதிர்ப்பொலிகள் கேட்கின்றன. அமெரிக்காவில் கூட றீகனின் இம் முடிவுக்குப் பலமான எதிர்ப்புண்டு. நியூயோர்க்கிலும் இன்னும் பல நகரங்களிலும் ஆர்ப்பபட்டங்கள் நடைபெற்றுள்ளன.

### ஐ. நா. கண்ட தோல்வி

ஐக்கிய நாடுகள் சபையில் கடந்த வருடம் நவம்பர் 23 இல் அணு ஆயுத உற்பத்தியை முடக்கம் செய்வதற்காக இரு பிரேரணேகள் கொண்டுவரப் பட்டிருந்தன. அதில் ஒன்று சகல நாடுகளினதும் அணு ஆயுத உற்பத்தியை முடக்க வெனக் கொண்டுவரப்பட்டது. மற்றையது, அமெரிக்காவுக்கும், சோவியத்துக்குமென தனியே கொண்டுவரப்பட்டது. ஆனுல் இப் பிரேரணே கள் அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா உட்பட பல மேற்கு நாடுகளால் தோற்கடிக்கப்பட்டன.

### முடிவு

இந்தக் கெடுபிடியான சூழ்நிலேயில், அமெரிக்கா சோவியத்மீது நேரடியாக தாக்குதலேத் தரக்கூடிய 572 மேலதிக ஏவுகணேகளே தயாரித்து சோவியத்தை நோக்கி நகர்த்தும் திட்டத்தை தடுப்பதற்காக கடந்தவருட பிற்பகுதியிலிருந்து நேரடியான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன. ஜெனீவாவில் நடைபெறும் இந்தப் பேச்சுவார்தைகளில் சோவியத்தும் அமெரிக்காவும், நேரடியாக ஈடுபட்டு வருகின்றன. இன்னமும் முடிவுருத இப் பேச்சுவார்த்தைகளில் அமெரிக்கா தனது ஆயுத ஆதிக்க வெறியை விட்டுக் கொடுக்குமா என்பது சந்தேகமாகவே உள்ளது. இதனுல் உலக சமாதானம் இன்று அணு ஆயுத முனேயில் தனதிரு கரங்களேயும் உயர்த்தி நிற்கிறதெனக் கூறுவது சாலப்பொருந்தும்.




உலக நாடுகளில் பிரதானமான அமெரிக்கத் தளங்கள்

**தரைப்படை:**

| | |
|---|---|
| மே. ஜேர்மனி | 177 |
| தென் கொரியா | 36 |
| ஜப்பான் | 15 |
| இத்தாலி | 2 |
| பிரித்தானியா | 1 |
| பெல்ஜியம் | 1 |
| பனமா | 1 |

**கடற்படை:**

| | |
|---|---|
| ஜப்பான் | 14 |
| பிலிப்பைன் தீவுகள் | 8 |
| இத்தாலி | 5 |
| பிரித்தானியா | 4 |
| பேமுடாஸ் | 3 |
| ஸ்பெயின் | 3 |
| பனமா | 3 |
| கிறீஸ் | 2 |
| டியாகோகாசியா | 1 |

**விமானப் படை:**

| | |
|---|---|
| பிரித்தானியா | 13 |
| மே. ஜேர்மனி | 11 |
| துருக்கி | 6 |
| தென் கொரியா | 4 |
| ஸ்பெயின் | 3 |
| பிலிப்பைன் தீவுகள் | 3 |
| ஜப்பான் | 3 |
| கிறீஸ் | 2 |
| இத்தாலி | 2 |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


## எங்களூர்

# கொல்லங்கலட்டி

இலங்கையின் வடமாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்நகரிலிருந்து சுமார் 10 மைல்கள் தொலைவில் அமைந்துள்ள ஒரு சிறு கிராமம் கொல்லங்கலட்டி. இக்கிராமம் காங்கேசன்துறை தேர்தல் தொகுதிக்குட்பட்டதாகும். இக்கிராமத்தைச் சூழ தெல்லிப்பளை, மாவிட்டபுரம், கீரிமலை, பன்னாலை என்னும் கிராமங்கள் அமைந்துள்ளன. சாதிரீதியாக கவனிக்கும் போது கொல்லங்கலட்டியின் மத்தியபகுதியில் உயர்சாதியினர் எனப்படுவோரும் கீரிமலைக்கு அண்மையான விவசாயம் செய்ய அருகதையற்ற கற்பாங்கான பிரதேசத்தில் ஒடுக்கப்பட்ட சமுகத்தினரும் குடியிருக்கின்றனர். ஒடுக்கப்பட்ட சாதியினர் தாம் கொல்லங்கட்டியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்வதனைக்கூட சில உயர்சாதிக் கொம்பர்கள் விரும்புவதில்லை. ஒடுக்கப்பட்ட சமுகத்தினர் வாழும் பகுதி பொதுவாக 'கலட்டி' என்றே அழைக்கப்படுகிறது. நாம் கொல்லங்கலட்டி. கலட்டி ஆகிய பகுதிகளை சேர்ந்து அங்கு வாழும் அனைத்து மக்களினதும் தொழில்முறைகளையும், பிரச்சனைகளையும் அவர்களது பொருளாதார நிலைமைகளையும் ஆராய்ந்து பார்ப்போம்.

## வாழும் வகுப்பினர்

இங்கு சுமார் 25% இனர் நடுத்தர வர்க்கத்தினராகவும் சுமார் 75% இனர் தொழிலாளர், விவசாயிகளாகவும் உள்ளனர். நடுத்தர வர்க்கத்தினருள் அரச, தனியார் துறை உத்தியோகத்தர்கள் மற்றும் சிறு வர்த்தகர்கள் ஆகியோர் அடங்குகின்றனர். மற்றும் இங்கு சிறு நிலவுடமை விவசாயிகள், குத்தகை விவசாயிகள், கூலி விவசாயிகள், சீமெந்துத் தொழிலாளர்கள், கட்டடத் தொழிலாளர்கள், சீவல் தொழிலாளர்கள் மற்றும் உதிரித் தொழிலாளர்கள் ஆகியோர் இங்கு வாழ்கின்றனர்.

## விவசாயிகள் தவிப்பு

இங்கு வெங்காயம், மிளகாய், தக்காளி, வெற்றிலை போன்றவை முக்கிய பயிர்ச் செய்கைகளாகவும் ஏனைய பயிர்கள் சிறு பயிர்ச் செய்கைகளாகவும் மேற்கொள்ளப்படுகின்றன.

எரிபொருள் விலையேற்றத்தாலும், சில நோங்களில் எரிபொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாலும், மின்சாரம் பெறுவதற்கு வசதிகள் போதாமலிருப்பதாலும், நோய்களைக் கட்டுப்படுத்த போதிய ஆலோசனைகள் வழங்கப்படாமையாலும், பயிர்ச்செய்கைகள் அதிகபயனைத் தருவதில்லை, விதை, உரம், கிருமிநாசினி வகைகள் எரிபொருள் ஆகிய வற்றை அதிக விலைக்கு பெற்று பாடுபட்டு விவசாயம் செய்த பின் அறுவடை செய்யும் சமயத்தில் அரசாங்கம் வெங்காயம், மிளகாய், போன்றவற்றை தாராளமாக இறக்குமதி செய்து குவிப்பதனால் இங்கு சிறுநிலவுடமை விவசாயிகளும் குத்தகை விவசாயிகளும் போதிய லாபம் பெறமுடிவதில்லை. சில சமயங்களில் நஷ்டமடைவதுமுண்டு. இதனால் இவர்கள் விவசாயத்தைக் கைவிட்டு அதிக லாபம் கிடைக்கும் துறைகளைத்தேடிச்செல்ல நேரிடுகிறது. நிலங்களை சொந்தமாக வைத்திருப்போர் காணிகளை விற்றோ, ஈடுவைத்தோ அல்லது குத்தகைக்குக் கொடுத்தோ பணத்தைப் பெற்று வேறு துறைகளில் மூலதனமிடுகிறார்கள். சிலர் வெளிநாடு சென்று உழைத்து வருகிறார்கள். வெளிநாடு செல்லும் ஆசையில் எல்லாவற்றையும் உதறித்தள்ளிவிட்டு பாஸ்போர்ட், விசா என்று ஏஜென்சிகளிடம் படையெடுத்துத் திரிவோர் ஏராளம். காசைக்கொடுத்து ஏமாந்தவர்கள், சென்றபின் திருப்பி அனுப்பப்பட்டவர்கள் சோகக் கதைகளை தினசரி பத்திரிகைகளில் காணமுடிகிறது. வீடு கட்டவேண்டும், சகோதரியர்க்கு நிறைய சீதனத்துடன் கல்யாணச் சந்தையில் விலையுயர்ந்த மாப்பிள்ளை தேடவேண்டும் என்பது போன்ற பிரச்சனைகள் இவர்களைப் பிடியில் தள்ளி அங்கு மிங்கும் அலையவைக்கின்றன. விவசாயத்தில் ஏற்படும் பிரச்சனைகளால் கலங்காது, (வேறு வழியில்லாததாலோ என்னவோ) தொடர்ந்து விவசாயத்தையே மேற்கொண்டு வரும் சில நிலவுடமை விவசாயிகளும் குத்தகை விவசாயிகளும் கூட உற்பத்திச் செலவுகளை இயன்றவரை குறைக்கும் நோக்கத்துடன் கூலி வேலையாட்களை அழைக்காமல் நஷ்டமடைய வேண்டியிருப்பினும் நிலவுடமை விவசாயிகளாலும், குத்தகை விவசாயிகளாலும் தமது வாழ்க்கையை ஓட்டவும் ஓரளவு சேமிக்கவும் முடிகிறது. மேலே கூறப்பட்ட பிரச்சனைகளால் அதிகமாக பாதிக்கப்படுபவர்கள் கூலிவிவசாயிகளே அன்றாடம் எங்காவது வேலை செய்து பெறும் ஊதியத்தைக் கொண்டு தமது வாழ்க்கையை ஓட்டும் இவர்கள் மிக அரிதாகவே வாய்ப்புக்கள் கிடைப்பதனால் நிரந்தர பரிகாரம் எதுவும் காண முடியாது அல்லற்படுகின்றனர். இவர்களில் மிகப் பெரும்பலானோர் சாதிரீதியாகவும் ஒதுக்கப்பட்டு விட்ட 'கலட்டி' பகுதியைச் சேர்ந்தவர்களே.

**சபா**

- ஒடுக்கப்பட்டோர் தாம் கொல்லங்கலட்டியைச் சேர்ந்தவர்களென்று சொல்வதைக்கூட உயர் சாதியினர் விரும்புவதில்லை !
- தாழ்த்தப் பட்டோருக்குத் தொழில் கொடுக்கமாட்டார்கள்.
- விவசாயிகள் முன்னேறப் பெரும் தடைகள்.

## தாழ்த்தப் பட்டோருக்கு வேலை கொடுப்பதில்லை

கலட்டிப்பகுதியில் வாழும் மக்களுக்கு அவர்களுடைய அரசியல் நிலைப்பாடு காரணமாகவும் சாதிப்பாகுபாடு காரணமாகவும் அருகிலுள்ள சீமெந்துத் தொழிற்சாலையில் வேலைவாய்ப்பு கிடைப்பதில்லை. சீமெந்துத் தூசியினால் இவர்கள் வாழும் குடிசைகள் வர்ணம் தீட்டப்படுவதைத் தவிர வேறெந்தப் பயனையும் இவர்கள் கண்டதில்லை. இங்கு ஒருசிலருக்கே கட்டடத் திணைக்களம், பொதுவைத்தியசாலை போன்ற இடங்களில் வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. எனவே இங்கு வாழ்வோர் கூலி விவசாயம் தவிர மற்றும் கட்டடத் தொழில், கல்லுடைத்தல், சீவல் தொழில் போன்றவற்றையே நம்பியிருக்கவேண்டியவர்களாகின்றனர். இத்தொழில்களில் எவ்வளவுதான் கஷ்டப்பட்டு உழைத்தாலும் தங்கள் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்த இவர்களால் முடிவதில்லை.

## கல்வி பாதி வழியில் தடைப்படுகிறது


கொல்லங்கலட்டியில் ஓரளவு வசதியுள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தெல்லிப்பளையிலுள்ள மகாஜனக் கல்லூரி, யூனியன் கல்லூரி ஆகிய உயர்தரப்பாடசாலைகளில் 12ம் வகுப்புவரை கல்விகற்க முடிகிறது. ஓரிருவர் பல்கலைக்கழக அனுமதியையும் பெற்றுக்கொள்கின்றனர். வசதி குறைந்த குடும்பங்களைச்சேர்ந்தவர்கள் கொல்லங்கலட்டி சைவ தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்வி கற்கின்றனர். 'கலட்டி'ப் பகுதியினைச்சேர்ந்த பிள்ளைகள் கீரிமலையிலுள்ள நகுலேஸ்வர வித்தியாலயத்தில் கல்வி கற்கின்றனர். இப்பாடசாலைகளில் 10ம் வகுப்புவரை கற்க வசதியுண்டு தத்தமது பொருளாதார நிலைமைகளுக்கேற்ப அநேகர் 5ம் வகுப்புடனும் சிலர் 7, 8ம் வகுப்புகளுடனும் கல்வி கற்பதை விட்டுவிட்டு எங்காவது சென்று கூலிவேலை செய்து தமது குடும்பத்தை அழுத்தும் சுமைகளை தாங்கிக்கொள்வதில் தாமும் பங்கேற்கின்றனர். ஒரு சிலர் 10ம் வகுப்புவரை தொடர்ந்து கற்கின்றனர். குறிப்பாக 'கலட்டி'யை சேர்ந்தவர்கள் யாரும் 10ம் வகுப்புவரை கல்விகற்பதில்லையென்றே சொல்லலாம்,

## அரசியல் வாதிகளின் தந்திரங்களும், இம்மக்களின் இன்றைய நிலைமையும்.

இவ்வாறாக பல்வேறு பிரச்சனைகளாலும் பாதிக்கப்பட்டு வரும் கொல்லங்கலட்டி வாழ் தொழிலாளர் விவசாயி மக்கள் இதுவரை வந்து நாவினிக்கப் பேசி எல்லாப் பிரச்சனைகளையும் தீர்த்து வைப்பதாகக் கூறி இவர்களை மிதித்துவிட்டு தாம் மேலேறிச் சென்றுவிடும் அரசியல் வாதிகளையே நம்பியிருந்தனர்.

இலங்கையின் சிங்கள இனவாத அரசினால் கட்டவிழ்த்து விடப்படும் திட்டமிட்ட அடக்குமுறைகளினால் இன்னலுக்குள்ளாகும் ஈழத்தின் பல பாகங்களிலும் வாழும் தமிழ் பேசும் மக்கள் 'ஈழவர்' என்ற தமது தேசிய அந்தஸ்தை நிர்ணயிக்கும் போராட்டத்திலே தாமும் முன்வந்து தமது பங்கினை நிறைவேற்றுவதன்மூலம் உழைப்பவனே அதன் பயனை அனுபவிக்கும் ஒரு உன்னத சமுதாய அமைப்பினை மலரச் செய்யமுடியும் என்ற நப்பிக்கையோடு ஏனைய தமிழ் பேசும் பாமரத் தொழிலாளர், விவசாய மக்களுடன் கைகோர்த்து முன்செல்லவேண்டிய அவசியம் இப்போது எங்களூரில் சில அறிவு ஜீவிகளிடத்தும், முற்போக்கான தொழிலாளர் விவசாயிகளிடத்தும் உருவாக ஆரம்பித்துள்ளது.

---



## குதிரெடுக்க வழிசமைப்போம்

—வி. ரி. இளங்கோவன்

✻ தையிலே அறுவடையென்று—சிரத்
தையிலே பயிர் செய்தும்
பையிலே ஏதும் இல்லை—அகப்
பையிலே ஏது வரும்?
கையிலே வலிமை இருந்தும்—உண்
கையிலெ துயரே ஏழும்
மையிலே வார்த்த சித்திரமும்—வறு
மையிலே துவண்டு விழும்!

✻ மடியிலே அழுங்குழந்தை—தாய்
மடி பார்த்தும் துடித்திடவே
வடிக்கின்றான் கண்ணீரை—க
வடி ல்லா மனத்தாலே
கடி மனது டையார்—தமக்
கடியாளாய் உழைத்தானே
விடி வேதும் கண்டானா?—அவன்
விடியும் வரை இருப்பானா?

✻ உதிரத்தை பிழிந் தெடுத்து—அவன்
உதிர்த்தானே வியர்வையே
பதினைந்து மணி நேரம் ஐம்
பதிலும் உழைத்தானே
புதிதாக ஏது கண்டான்—அவன்
புதிராகி நின்றானே
குதித் தாடும் வர்க்கத்தார்—தம்
குதி ரெடுத்தால் வாழ்வானே!

(பிரசுரமாகியது)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**மலையக மக்கள்....** (1-ம் பக்கத் தொடர்ச்சி)

# இவற்றிற்கெல்லாம் பூரண தீர்வு சமூக-மாற்றமே!

தோட்டத்துக்கு கிளம்பிவிட்டார். ஆயினும் தொழிலாளர், துரையின் மீள்வருகைக்காக காத்திருந்தனர். திரும்பிவந்த தோட்டத்துரை றெபர்ட்ஸ், காத்திருந்த தொழிலாளர் ஊடாக மூர்க்கத்தனமாக காரைச்செலுத்த, ராஜா ஜெபமணி என்ற இளைஞர் படுகாயமுற்று உயிரிழந்தார். இந்தச் சமயத்தில் காத்தான் இலட்சுமி என்ற பெண் தொழிலாளி துரையின் எடுபிடிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டிருக்கிறார். படுகாயமுற்ற இவரின் ஒரு காலும் காடையர்களால் வெட்டப்பட்டது.

ஜனவரி 25இல் நடந்த இந்தச் சம்பவத்தை அடுத்து பெப்ருவரி 22இலும் இன்னொரு சம்பவம் நடந்திருக்கிறது.

**லிடஸ் டோலில் மர்மமரணம்!**

இராகலை மாவட்டத்தில் உள்ளதே லிடஸ்டோல் தோட்டம். இதில் பெப்ரவரி 19ம் திகதி தோட்ட அதிகாரி ஒருவரால் தொழிலாளி தாக்கப்பட்டதைத் தொடர்ந்து மறுநாள் ஏற்பட்ட கலவரத்தில் பல தொழிலாளர் காயப்படுத்தப்பட்டிருந்தனர்.

இதன்பின் இதே மாதம் 22ம் திகதி இரவுக்காவல் வேலைக்குச்சென்ற குணசீலன் என்ற 19 வயது [illegible] முறையில் மரணமாயிருந்தார். இவரது தலை சேதத்துக்குள்ளாக்கப்பட்டு இரத்தத்தில் தோய்ந்திருந்தது. இப்பகுதியில் குடியேற்றப்பட்ட சிங்களவர் இருந்து வருவதை நாம் உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும்.

இவ்வகையில் மர்மமாயும், வெளிப்படையாயும் இதுவரையில் செய்யப்பட்டு வந்த கொலைகளின்எண்ணிக்கை, இ. தொ. கா பொதுச் செயலாளரின் கூற்றுப்படி 79 ஆக இருக்கிறது.

காட்மிராண்டிச் செயல்கள் தொடராக நடந்துவர தோட்டத்துரைமார் சங்கம் அண்மையில் எடுத்திருந்த நடவடிக்கை பற்றி 'ஐலண்ட்' பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தி அரசாங்கம் எவ்வளவு தூரம் இத்தகைய செயல்களுக்கு தூண்டுகோலாயிருந்து வருவதை உணர்த்தி நிற்கிறது. இச்செய்திப்படி துரைமார் சங்கம் பொலிஸ் மேலிடத்தை சந்தித்திருக்கிறது. சந்திப்பின் போது பொலிஸ் உயர்மட்ட அதிகாரிகள், துரைமாருக்கு தாம் போதிய பாதுகாப்பளித்து, துணைபுரிவதாக உறுதியளித்திருக்கின்றார்கள். விரைவில் நடைபெற இருக்கும் ஜனாதிபதியுடனான சந்திப்பிலும், தமக்கு சாதகமான முடிவு கிட்டுமென இவர்களுட்பட ஏனையோரும் எதிர்பார்க்கின்றனர்.

**பன்குளத்தில் குடிசைகளுக்குத் தீ!**

மலையகத்தில் நிகழ்ந்து வந்ததும், வருவதுமான கலவரங்களினாலும், பாரிய பொருளாதாரப் பிரச்சனைகளினாலும் வடக்கு, கிழக்கு நோக்கி சிலர் இடம் பெயர்ந்து வருகின்றனர். இவர்களை இங்கும் வாழவிடாமல் கொடுமைப்படுத்துவதையே அரசாங்கமும் அதன் அதிகாரிகளும் முழுக் கவனம் செலுத்துகிறார்கள். அண்மையில் திருமலை மாவட்டத்தில் உள்ள பன்குளம் என்ற பகுதியில் நடந்ததென்ன?

மலையகத்தில் கலவரத்தால் பாதிக்கப்பட்டு புகலிடம்தேடி அவதி நிலையில் வந்த சில மலையகக் குடும்பங்கள் பன்குளத்தில் குடிசை அமைத்து குடியேறி இருந்தனர். திடீரென இம்மாதம் 14ம் திகதி இவர்களுக்கு அவ்விடத்தை விட்டு வெளியேறி விடவேண்டுமென்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இதை எவ்வித காரணமும் காட்டாமல், பன்குளம் உதவி அரசாங்க அதிபரே வகுத்திருக்கிறார். தமது வாழ்வின் அவலத்தை எடுத்துக் கூறி இம்மக்கள் மன்றுடியபோதும் உத்தரவில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை. அதிகாரிகளின் அதிகாரத்தனமே சுவாலைவிட ஆரம்பித்தது, 14ம் திகதி காலை ஒன்பது மணிக்கு குடிசைகளை குண்டர்கள் சுற்றிவளைக்க கிராம சேவகர் தீ வைத்து 16 குடிசைகளையும் வீட்டுத்தளபாடங்களையும் சாம்பலாக்கினர். இதுதான் இப்போது அரசாங்க சேவகரினது சேவை? கிராம சேவகர் கிராம நாசகராக மாறுகின்றனர். இப்போது இந்த [illegible] ஏற்படுத்தப்பட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

இத்தகைய அடுத்தடுத்த சம்பவங்கள் எமக்குப் பல பாடங்களைப் புகட்டுகின்றன. இத்தனை சம்பவங்களுக்கும் கால்கோலாக, அரசாங்கமே செயல்படுவதை இச்சம்பவங்கள் நன்கு அம்பலப்படுத்தியுள்ளன. ஒருபுறம், தமிழ்பேசும் மக்களின் ஒருசாரார் என்ற வகையில் மலையக மக்கள் மீது வெறித்தனம் காட்டப்படுகிறது. மறுபுறம் தொழிலாளர் என்ற வகையிலும் மூர்க்கத்தனம் காட்டப்படுகிறது. இனரீதியாகவும் வர்க்கரீதியாகவும் இனங்கண்டு இவர்களை அடக்கி ஆண்டு அழிக்கும் கைங்கரியத்திலேயே அரசு இறங்கி வருகின்றது. இதற்கு துணை போபவர்களும் அரசின் அந்தரங்க எண்ணப்பாட்டை, உள்ளக்கிடக்கைகளை முன்னின்று நடத்திக்காட்டுபவர்களும், அரசாங்க சேவகர்கள் என்ற அந்தஸ்தைப் பெறுகிறார்கள். இவர்களுக்கு பாதுகாப்பளிக்க முகாமிட்டிருப்பவர்களே பாதுகாப்புப் படையினர். இந்த வக்கிரமுகம் படைத்தவர்களின் கூட்டு முயற்சிகளால் கூடுதலாக கசக்கிப் பிழியப்படுபவர்களே தமிழ் பேசும் மக்களின் பெரும்பான்மையினரான தொழிலாளரும் விவசாயிகளும். அரசாங்க அதிகார வெறித்திட்டங்களை செயற்படுத்தி வரும் அடிவருடிச் சேவகர்களுக்கும் தொழிலாளருக்கும் இடையில் நின்று, விலக்குப்பிடிப்பவர்களே தொழிற்சங்க வாதிகள். இவ்வாறு தான் இந்தச் சமூக அமைப்பு அமையப்பெறுகிறது. ஏவுபவர்கள், எடுபிடிகள், அடக்கப்படுபவர்கள் என்ற கற்களால் கட்டப்பட்டிருப்பதே இந்தச் சமுதாய அமைப்பு. இதை மாற்ற முயலாமல் அதன்மீதே ஏறி நின்று பிரச்சனைகளை தீர்க்க முடியுமா? இதுவரை எந்த அடிப்படைப் பிரச்சனைக்கு பரிகாரம் தேடப்பட்டுள்ளது? அதனால் தான் இன்றைய அவசிய கடமை சமூக மாற்றத்திற்கான அணிவகுப்பேயன்றி வேறில்லை எனப் பகர்கிறோம். ஆய்வாளரின் இந்த முடிவையே தர்க்கீகம் காட்டி நிற்கிறது. தர்க்கீக வாதிகள் முன்வைக்கும் வடக்கு கிழக்கு மலையகம் தழுவிய ஈழக்கோரிக்கையின் உட் பொருள் இச் சமூகமாற்றமே! இம் மாற்றத்தை ஏற்படுத்தும் வல்லமையைப் பெற்றவர்கள் பாமர தொழிலாள விவசாயிகளே! இவர்களுக்கு உந்து சத்தியாக உறுதுணையாக விளங்க தம்மைத் தயார்ப் படுத்திக் கொள்பவர்களே தர்க்கீக வாதிகள்!

---

**அரசின் பொருளாதாரக் கொள்கை...** (1-ம் பக்கத் தொடர்ச்சி)

# ஜயவர்த்தனவுக்கு எதிராக ஒரு சக்தி திரண்டு வருகிறது....

ஆகிய பொருட்களை சந்தைப் படுத்துகிறது. இலங்கையில் இக் கம்பனி 32 லட்சம் ரூபாவை முதலீடு செய்தது. இங்கு மொத்தம் 152 பேர் வேலையில் ஈடுபட்டிருந்தனர். இவர்களில் நிர்வாக அதிகாரிகள் 14 பேராயிருந்தனர். இவர்களில் அனேகர் வெளிநாட்டவர்களாயிருந்தனர். இந்த அதிகாரிகளின் மொத்த மாதச் சம்பளம் 41,500/– ரூபாவாக இருந்த அதேவேளை 152 பேரில் மீதியாயிருக்கும் 138 பேரும் ஊழியர்களாயிருந்தனர். இவர்களில் அனேகர் உள்நாட்டைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். இந்த ஊழியர்கள் பெறும் மொத்த மாதச் சம்பளம் 37,500/– ரூபாவாகவே இருந்தது. இதிலிருந்து இந்தக் கம்[illegible] சம்பளத்தில் 50% வெளிநாட்டு அதிகாரிகளிடம் போய்ச் சேருவதைக் காணலாம்.

அத்துடன் இக் கம்பனி 32 லட்சம் ரூபாவை முதலீடு செய்து மிகக் குறுகிய காலத்திலேயே 90 லட்சம் ரூபாவை இலாபப் பங்கீடாகப் பெற்றுக்கொண்டது. இந்த இலாபத்தில் 85%மானவற்றை பிரித்தானியாவிலுள்ள அதன் தாய் நிறுவனமே அபகரித்துக்கொண்டது. இந்த வகையில் தான் வெளிநாட்டு நிறுவனங்களின் செயற்பாடுகள் அமையப்பெறுகின்றன. இவ்வாறு உள்நாட்டு மூலவளங்களையும், உற்பத்தியையும், உள்நாட்டு மக்களின் உடல் உழைப்பையும் சுறுட்டிச் செல்லும்போது நாடு வறுமைப் பள்ளத்தாக்கில் பாயாமல் வேறு வழியில் செல்ல முடியாது. இதனை உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்டுவரும் வீழ்ச்சியும், விலைவாசி அதிகரிப்பும் ஊர்ஜிதப்படுத்தியே நிற்கின்றது. உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் 1978ல் 8.8 ஆயிருந்தது. 1979ல் 6.4 ஆகவும் 80ல் 5.6 ஆகவும் 81ல் 4.1 ஆகவும் 82ல் 3.1 ஆகவும் படிப்படியாக சிதைந்து வருகிறது. இது இந்நாட்டின் பின்னடைவையே சுட்டிக் காட்டுகிறது. இதிலிருந்து ஏகாதிபத்திய நாடுகளுக்கும், அந்த நாட்டு செல்வந்தர்களுக்கும் இந் நாட்டின் பொருளாதாரத்தை வடிகட்டி கொடுக்கும் நோக்கத்தைக் கொண்டதே ஜயவர்த்தனவினதும், அவரது தார்மீக அரசினதும் திறந்த பொருளாதாரக் கொள்கை என்பதை இன்று மக்கள் உணரவேண்டிய காலம் வந்துவிட்டது. எனவேதான் இதனை நாம் திறந்த பொருளாதாரக் கொள்ளை என்று சொல்லத் தலைப்பட்டோம்.

**உள்நாட்டில் சொத்து ஒதுங்குகின்றது.**

அரசு தன் கொள்கையில் தனியார் முதலீட்டுக்கு போதிய சுதந்திரம் கொடுத்திருப்பதைச் சாதகமாக வைத்துக் கொண்டு, இவர்கள் இந் நாட்டில்நுழைந்துள்ள வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு கைப்பொம்மையாக மாறி அவர்கள் இந் நாட்டை சூறையாடிச் செல்ல பாலமாகச் செயல்படுவதும், மேலும் இந் நாட்டின் பொருளாதாரத்தில் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. தனியார் முதலீட்டின் தொழில் துறை காரணமாக தேசியமயத் துறை பாதிக்கப்பட்டு நாட்டிலுள்ள வளங்களும் உற்பத்திகளும், மக்களின் உழைப்பும் அரசாங்கத்தினூடாக மீண்டும் மக்களுக்காக பல துறைகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படுவதற்குப் பதிலாக தனியாரின் கைகளுக்கு இந் நாட்டின் உற்பத்தியும்பணமும்கொண்டு செல்லப்பட்டு, விரல்விட்டு எண்ணத்தக்க குறுகிய எண்ணிக்கையைக் கொண்டவர்களின் சுகபோகங்களுக்கும் எண்ண அபிலாசைகளுக்குமாக வீண் விரயம் செய்யப்படுகிறது. இந்நிலை தனிப்பட்ட ஒரு சிலர் வளர்வதற்குத் தக்க வறியவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போவதைத் தவிர வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது.

இவைகாரணமாக ஏற்பட்ட மோசமான பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கு, இரண்டே இரண்டு வழிகளைத்தான் இந்த அரசாங்கம் நம்பியிருப்பதாக நிதிமந்திரி குறிப்பிட்டிருந்தார். (1) வெளிநாட்டுக் கடன் (2) உள்நாட்டு வசூல். இவை காரணமாகவே இன்று இறக்குமதி வரி, மொத்தவியாபாரவரி, என்ற இரண்டு சொற்களில் நாட்டில் மக்களின் நுகர்வுப் பொருட்கள் அனைத்துக்கும் விலையேற்றப்பட்டதும், அத்துடன் புதிய வேலை வாய்ப்புகள், அபிவிருத்திகளுக்கான ஒதுக்கீடுகள் நிறுத்தப்பட்டதுமான நடவடிக்கைகளில் இறங்குவதைத் தவிர வேறு வழியற்றுத் தவிக்கிறது இந்த அரசாங்கம்.

உற்பத்தித்துறை வளர்க்க நடவடிக்கை எடுக்காத இந்த அரசாங்கத்தின் போக்கு எதிர்காலத்தில் என்ன நிலைக்குள்ளாகும் என்பதை அரசாங்கம் அறியாவிட்டாலும் மக்கள் மத்தியிலுள்ளமுன்னோடிகள் அறியத் தலைப்பட்டிருப்பார்கள் என்பதே தர்க்கீக வாதிகளின் கணிப்பாகும்.

**எதிர்ப்புகள்:**

பொருளாதார நெருக்கடிகள் அதிகரிக்க அதிகரிக்க, மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்க முயல்வது தவிர்க்கமுடியாத தொன்று. வேலை நிறுத்தங்களாயும், வன்முறைகளாயும், முணுமுணுப்புகளாயும் இவை நாட்டில் துளிர்விட்டு வருகின்றன. இந்தத் துளிரை முளையிலேயே கிள்ளியெறிய ஜெயவர்த்தன அரசாங்கம், ஏகாதிபத்திய வாதிகளுடன் கைகோர்த்து நிற்கிறது. இதற்கான பயங்கரமான அக்கிரமச் சட்டங்களைத் தீட்டி நிறைவேற்றி நடைமுறைப் படுத்துவதையே, இதுபோன்ற முதலாளித்துவ அரசாங்கம் மேற்கொள்ளும் என்பதை மக்கள் உணரும் காலமும் நெருங்கிவிட்டது.

பொருளாதாரத் துறைகளிலிருந்து பிறக்கும் இந்த எதிர்ப்புகளை முறியடிக்க, இந்தச் சட்டங்கள் துணைதருமா? என்பது தான், இன்று அரசியல் அவதானிகளின் கேள்வியுமாக இருக்கிறது. பொருளாதாரத் தளத்தை மாற்ற எடுக்கும் முயற்சியைத் தவிர வேறெதுவும் பயனளிக்கப் போவதில்லை ஆனபோதிலும், ஜெயவர்த்தனஅரசாங்கம் இந்தப் பொருளாதாரக் கொள்கையை ஒரு போதும் கைவிடப்போவதில்லை பதிலாக எதிர்ப்புகளை அடக்கியொடுக்கத் தனது 40 வருட அரசியல் அனுபவத்தை கிளறிப்பார்க்கவே முயல்வார். நினைத்ததெல்லாவற்றையும் சட்டமாக்கி, புத்த தர்மத்தையும் சந்திக்கிழுத்துக்கொண்டு ஆயுதப் படைகளை ஏவிவிட்டு சர்வாதிகார ஆட்சியை நோக்கி முன்னேறுவார்.

எப்படி முதலாளிகள் தமக்கெதிரான, தம்மையே அழிக்கும் சக்திபடைத்த தொழிலாளரை இடைவிடாமல் உருவாக்கிவருகின்றார்களோ, அதேபோல் இந்த ஜெயவர்த்தன அரசாங்கமும் தனது பவனியில் தனக்கெதிரான ஒரு மக்கள் சக்தியை இடைவிடாமல் உருவாக்கி வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

---

இப்பத்திரிகை ஊரெழு மேற்கு எஸ். விக்னேஸ்வரன் அவர்களால் யாழ்ப்பாணம் பிரதானவீதி 360-இலக்கத்திலுள்ள புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அணிசேரா மாநாடு:

# வளர்முக நாடுகளிடம் உதவி கோரி தூது போக வேண்டும் — ஜயவர்த்தன.

# யாருக்காகவும் யாரிடமும் உதவிகோரி மன்றுடத் தயாரில்லை — இந்திரா

அபிவிருத்தி அடைந்த நாடுகளிடம் உதவி கோரி பேச்சுவார்த்தை நடாத்த வேறுபட்ட பிராந்தியங்களின் பிரதிநிதிகளை கொண்ட குழுக்களை உருவாக்கி அதற்கு இந்தியப்பிரதமர் இந்திராகாந்தி தலைமை தாங்க வேண்டும் என ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன கோரிக்கை ஒன்றை விடுத்தார்.

புதுடில்லியில் நடைபெற்ற 101 நாடுகளடங்கிய அணிசேரா அமைப்பின் உச்சிமாநாட்டிலேயே மேற்படி வேண்டுகோளை விடுத்திருந்தார்.

''எவருக்காகவும் உதவி கோரி மன்றாடும் நோக்கம் எனக்கில்லை. எங்கள் கொள்கை பற்றி அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு நன்கு தெரியும்'' என, இந்தியப் பிரதமர் இந்திரகாந்தி ஜயவர்த்தனவின் வேண்டுகோளுக்கு மறுப்புத் தெரிவித்திருந்தார்.

ஜயவர்த்தன ஒரு கட்டத்தில், ''இந்து சமுத்திரத்தை சமாதான பிராந்தியமாக பிரகடனப்படுத்தும் போது, டியாகோ-காசியா தீவிலுள்ள அமெரிக்கத் தளத்தை கருத்திலெடுக்காமல் இருக்குமாறு குறிப்பிட்டபோது, மாநாட்டில் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இம்மாநாட்டில், லத்தீன் அமெரிக்கா, மத்திய கிழக்கு; தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் நடக்கும் பிரச்சனைகளைப்பற்றியும் பேச்சுக்கள் இடம்பெற்றிருந்தன.

இவற்றுடன் பிரதானமாக ஈரான்—ஈராக் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் பற்றியும் கருத்துகள் வெளியிடப் பட்டிருந்தன.




## நச்சுக்குண்டு உற்பத்தியில் நாட்டம்

மனித நரம்பு மண்டலங்களைத் தாக்கி பேரழிவை ஏற்படுத்தும் பயங்கர நச்சுவாயுக் குண்டுகளை உற்பத்தி செய்வதில் அமெரிக்கா நாட்டம் காட்ட ஆரம்பித்திருக்கிறது

இந்தக் குண்டுகளை உற்பத்தி செய்வதற்கென 1984 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 15 கோடியே 80 லட்சம் டலரை ஒதுக்க வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி றீகன் கேட்டிருக்கிறார்.

இக்கோரிக்கையை பாதுகாப்பு அமைச்சர் காஸ்பர் வேன்பேர்கர் வரவேற்றுப் பேசினார். அவர் கூறியதாவது:— அமெரிக்காவிடம் தற்போது இருக்கும் இரசாயன நச்சு ஆயுதங்களின் கையிருப்பு போதியதாக இல்லை. இரசாயன யுத்தத்தைத் தவிர்ப்பதற்கான உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்ள வேண்டும் என ரஷ்யாவைத் தூண்டுவதற்கு இந்த ஆயுதங்கள் அவசியமாகின்றன எனவும் அவர் கூறினார்.

## கோர்சிகன் தேசிய விடுதலை முன்னணிக்குத் தடை!

பிரான்ஸிடமிருந்து கோர்சிகாத்தீவின் சுதந்திரத்தை வலியுறுத்திவந்த, கோர்சிகன் தேசிய விடுதலை முன்னணி என்ற இயக்கத்தை பிரான்ஸ் அரசாங்கம் தடை செய்துள்ளது.

இத்தீவில் நடைபெற்று வரும் அரசியல் வன்முறைச் சம்பவங்களை முறியடிப்பதற்கான தீவிர நடவடிக்கைகளை பிரான்ஸ் அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

இந் நடவடிக்கைகளுக்கு எதிராக சாரதிப்பயிற்சிக் கல்லூரி ஒன்றில் குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்திருக்கிறது.

தீவில் கெரில்லாக்களின் நடவடிக்கைகள் அதிகரித்து வந்திருப்பதை அடுத்து பொலீஸ் பதவிகளிலும் பெரும் மாற்றம் செய்யப்பட்டு வருகிறது.

கடந்த வருடம் இத்தீவில் சுமார் 700 குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நடந்துள்ளன.

## அசாமில் வன்முறை: மக்கள் அகதிகள் முகாம்களில் தஞ்சம்.

அஸ்ஸாம் மாநிலத்தில் பழங்குடிமக்களும், வங்காள தேசத்திலிருந்து வந்து குடியேறியவர்களும், வேற்று மாநிலத்தவர்களும் வாழ்ந்து வருகிறார்கள். வேற்று மாநிலத்தவர்கள் நிர்வாக ரீதியாக பலமுற்றவர்களாகக் காணப்படுகிறார்கள். பழங்குடிமக்களின் கோரிக்கை அஸ்ஸாம் மாநிலத்திலுள்ள வேற்று மாநிலத்தவர்களும், வந்து குடியேறியவர்களும் வெளியேற வேண்டுமென்பதாகும். அண்மையில் மத்திய அரசு தேர்தலை நடத்தியபோது, பழங்குடிமக்கள் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டுமெனக்கோரிக்கை விடுத்தனர். தேர்தலின்போது நடந்த கலவரத்தில் 16 கிராமங்கள் சேதத்துக்குள்ளாகி 2500பேர் உயிரிழக்க நேரிட்டது.

வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட 2 லட்சத்து 30 ஆயிரம் பேர் அஸ்ஸாம் மாநிலத்தை விட்டு அண்டை மாநில அகதிகள் முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

## பாகிஸ்தானுக்கு அமெரிக்கப் போர் விமானங்கள்

பாகிஸ்தானுக்கும் அமெரிக்கா மூன்று 40 எவ் – 16 ரக போர் விமானங்களை ஜனவரி நடுப்பகுதியில் அனுப்பிவைத்துள்ளது. இப்போர் விமானங்கள் பாகிஸ்தானை வந்தடைந்துள்ளதென பாகிஸ்தான் விமானப்படைத் தலைமையகம் வெளியிட்ட அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

மேலும் மூன்று விமானங்கள் வெகுவிரைவில் வந்தடையும் எனவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1981ல் செய்து கொள்ளப்பட்ட ஓர் ஒப்பந்தத்தில் 320 கோடி டலர் பெறுமதியான இராணுவ, பொருளாதார உதவிகளை பாகிஸ்தானுக்கு வழங்க அமெரிக்கா விருப்பம் தெரிவித்தது. அவ்வொப்பந்தத்தின் ஒருபகுதியே இவ் விமானங்கள்.

உங்கள் ஆக்கங்களை 'தர்க்கீகம்' வரவேற்கின்ற, அதே வேளையில் தர்க்கீகத்தை நீங்கள் திறனாய்வு செய்யலாம். அதன்மூலம் 'தர்க்கீகம்' மேலும் தன்னை செழுமைப்படுத்திக் கொள்ளும். உங்கள் ஆக்கங்கள் எங்கள் சமூக நிலையை எடுத்துரைப்பவையாகவும் சமூகமாற்றத்தை கோருப்வையாகவும் அமையட்டும்.

'தர்க்கீகம்'
த. பெ. எண் 103,
யாழ்ப்பாணம்.




தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், குறிப்பாக தமிழ் இளைஞர்களுக்குமிடையில் நிலவிவந்த விரிசல்கள் அண்மைக்காலங்களிலிருந்து அம்பலத்துக்கு வந்துள்ளன. ''இளைஞர்கள் மிகவும் கட்டுக்கோப்புடன் இயங்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சுட்டுவிரல் காட்டுவது இதையே ஊர்ஜிதப் படுத்துகிறது. ''கூட்டணி என்ன செய்கிறது? போராட்ட முனைகளிலிருந்து விடுபட்டு ஊழல் நடவடிக்கைகளுக்கு முண்டு கொடுத்தா வருகிறது? —இந்த அர்த்தத்தில் இளைஞர்கள் கேள்வி கேட்பதும் விரிசலுக்கு எடுத்துக்காட்டுகளாகின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணி தான் வைத்த 'தமிழீழக்' கோரிக்கைக்கான சகல நடவடிக்கைகளையும் எடுக்குமென மேடைகளில் நின்றும், பத்திரிகைகளில் அறிக்கைவிட்டும், விமானங்களில் பயணமாகியும் பிரச்சாரித்து வருகிறது. கூட்டணியினரின் கூற்றுப்படி இக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டிய காலம் வெகு நீண்டது.

இதனால் இப்போராட்டத்துக்காக அவ்வப்போது சில ஆயத்த வேலைகள் செய்ய வேண்டியுள்ளது என்றும் கூறிவருகிறார்கள். அபிவிருத்திபற்றிப் பேசுவது, கமத்தொழில் உத்தியோகத்தர் போன்ற வேலைகளை எடுத்துக் கொடுப்பது, ஆசிரியர்களை இடமாற்றம் செய்வது, வெளிநாடுகளுக்கு வேலை தேடிச் செல்வோருக்கு கையொப்பமிடுவது, விருந்துபசாரங்கள் வைப்பது, அமெரிக்க யுத்தக்கப்பலின் தளபதிக்கு கைகொடுப்பது, ஈழக்கோரிக்கையின் பரம எதிரிகளான ஜனாதிபதியிடமிருந்தும் அரச உறுப்பினரிடமிருந்தும் இக் கோரிக்கைக்கான ஆதரவைத் திரட்டுவது போன்ற 'ஆயத்த' வேலைகளைச் செய்து வருகிறார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வைத்த கோரிக்கையினால் கவரப்பட்டு, உந்தப்பட்ட சில இளைஞர்களின் பாதை வேறு விதமாக இருக்கிறது. இவர்களில் அநேகருக்கு வன்முறைகளில் நாட்டமதிகம். வன்முறையாளர் ஆரம்பத்தில் துரையப்பா போன்றவர்களை துரோகிகளாக நினைத்து தீர்த்துக்கட்டினார்கள். பின்னர் தம்மைத் தேடிப்பிடித்து சித்திரவதை செய்யும் இரகசியப் பொலிசாரைச் சரிக்கட்டினார்கள். இயக்க வேலைகளுக்காகப் பணத்தை தேடி வங்கிகளுள் புகுந்தார்கள். ஆயுதப்போராட்டத்துக்கு ஆயுதம் சேகரிக்க எண்ணி அரச காவலரிடமும் பொலிஸ் நிலையங்களுக்கும் போனார்கள். இப்போது சமூக விரோதிகள்மீது கவனத்தை திருப்பியிருக்கிறார்கள்.

இவ்வாறு இவர்களின் 'திடீர்த்தாக்குதல்களின்' நோக்கம் காலத்துக்குக் காலம் தாவித் தாவிச் சென்றிருக்கின்றது.

கூட்டணியினரின் 'ஆயத்த' வேலைகளும், இளைஞர்களின் 'திடீர்த்தாக்குதல்களும்' ஈழப் போராட்டத்தின் படிக்கற்களாக முடியுமா? இவை எவ்வளவு தூரம் மக்கள் ஆமோதித்த கோரிக்கைக்கு உறுதுணையாய் இருக்கின்றன?

மக்களோ வடக்கு, கிழக்கு, மலையகம் என பிளவு படுத்தப்பட்டிருக்கிறார்கள். பல இலட்சக் கணக்கானவர்கள் நாடற்றவரென்ற சிறப்புப் பட்டதாரிகளாக இருக்கிறார்கள். பிரதேசங்கள் நாளுக்கு நாள் பறி போகின்றன. அரச காவற்துறையினர் இம்மக்கள் மீது தாக்கியும் சுட்டும் பழகுகிறார்கள். பஞ்சம், பட்டினி என்று அன்றாடம் வாழ்வைக் கடத்தவே உயிரைப் பணயம் வைக்க வேண்டிய நிலையில் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் யார்? இவர்களே ஈழப்போரராட்டத்தின் சக்தியாய் உருவெடுப்பவர்கள்.

'ஆயத்த' வேலைகளும், 'திடீர்த்தாக்குதல்களும்' இம் மக்களின் பிரச்சனைகளுடன் பின்னிப் பிணைந்தனவா? செய்து வரும் வேலைகளூடாக இம் மக்களின் ஆதரவை பெற்றுக் கொள்ள முடிகிறதா? இருசாராரும் முக்கிய பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் முகத்தைத் திருப்பி 'பாரா ஆசனத்தில்' அமர்ந்திருக்கிறார்கள்.

இந்தப் போக்குகள் ஒருபோதும் விடுதலையைத் தேடித் தரப்போவதில்லை.

முதலில் மக்களின் பிரச்சனைகள் மீது தகுந்த கண்ணோட்டம்-வர்க்கக் கண்ணோட்டம் செலுத்தப் படவேண்டும். அவற்றை இனங்கண்ட நிலையில், ஈழக் கோரிக்கையை எய்தக்கூடிய வகையிலமைந்த வேலைத்திட்டங்களை தீட்டிக்கொள்ள வேண்டும். இவை புரட்சி அமைப்பினை ஆரோக்கிய முடையதாக்கவும், மக்கள் அவ்வமைப்பின் மீது நம்பிக்கை வைத்து கிளர்ச்சிக்கும் புரட்சிக்கும் அணிவகுத்து வர உதவும் வகையில் இருத்தல் வேண்டும். இதுவே ஈழவருக்கான ஈழப்பிரதேசத்தை விடுவித்துக் கொள்ளும் மார்க்கமாக அமைகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்